# அன்பு பகிர்வு இயக்கம்

# செய்திமலர்


| | |
|---|---|
| தனிப்பிரதி | ₹. 10/- |
| ஆண்டுச் சந்தா | ₹. 100/- |
| ஆயுள் சந்தா | ₹. 1000/- |

மலர் 13 இதழ் 06 ஏப்ரல் 2017




## ....தாம் சொன்னபடியே இயேசு உயிர்த்தெழுந்தார்

மத்தேயு.28:6


ஆசிரியர்.

பேராயர் வே. தேவதாஸ்



# உங்கள்
# சகோதரனிடமிருந்து

ஆண்டவரும் ரட்சகருமாகிய உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

தேவகிருபையினாலும் உங்கள் யாவரின் ஜெபங்களினாலும் கடந்த 3 மாதங்கள் தேவன் அற்புதமாக ஷாலோம் ஊழியங்களை பீல் மக்கள் மத்தியில் நடத்திவந்த கிருபைக்காக தேவனை துதிக்கிறோம் உங்கள் ஜெபங்கள் மற்றும் ஆதரவுகளுக்காக தேவனை துதிக்கிறோம்.

கடந்த மார்ச் மாதத்தில் அனைத்து ஊழியர்கள் கூடுகை, ஆலயப்பிரதிஷ்டை மற்றும் மருத்துவ முகாம்கள்; பணித்தளங்கள் பார்வையிடுதல் மற்றும் திருமண்டலத்தின் சபை ஒருங்கிணைப்பு பணிகள் நடத்தும்படியாக தேவன் கிருபை தந்தார். பீல் ஆதிவாசி மாணவர்கள் 10th மற்றும் +2 தேர்வுகளை சிறப்பாக எழுதியுள்ளார்கள்.

மேலும் சென்னையில் 2 சபைகளில், பெங்களூர் பட்டிணத்தில் All People Church சபையில் தேவசெய்தி கொடுக்கவும்; பெங்களூரில் ஷாலோம் பங்காளர் கூடுகை நடத்தவும் தேவன் கிருபை தந்தார். விசேஷமாக நம் Sharing Love Mission மற்றும் Shalom Charity Mission "Board Meetings" களை 13.03.2017 அன்று நடத்த தேவன் கிருபை தந்தார்.

தொடர்ந்து இந்த ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ள பாடுபட்ட வாரம் மற்றும் ஈஸ்டர் திருநாள் ஆராதனைகளை தேவன் ஆசீர்வதிக்கவும், இந்த மாதம் 10 கிராம ஆலயங்களை கட்டி முடித்து பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள்.

ஷாலோம் CBC மூலமாக 600க்கும் அதிகமான சபைகளில் 50,000 ஆதிவாசி பிள்ளைகளை தேவனண்டை வழிநடத்த **எழும்பி பிரகாசி** தலைப்பில் நடைபெற உள்ள CBC ஆசிரியர்கள், இயக்குநர்கள் பயிற்சிக்காக ஜெபியுங்கள்.

Compassion மூலமாக தாங்கப்பட்ட 850 ஆதிவாசி பிள்ளைகளின் ஆதரவு தொகை நிறுத்தப்பட்டாலும் Shalom மூலமாக கல்விபணி ஆதரவு திட்டம் நிறைவேற்றப்பட ஜெபியுங்கள். உடனடியாக மாதம் ரூ.700 கொடுத்து ஜெபித்து தாங்கக்கூடிய ஆதிவாசி மாணவர் ஆதரவாளர்களாக முன்வர அழைக்கிறேன்.

தேவன் தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக! உங்கள் யாவருக்காகவும் நாங்கள் குடும்பமாக, ஊழியமாக இணைந்து ஜெபித்து வருகிறோம்.

இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். மத். 28:20

**தேவ அறுவடைப் பணியில் உங்கள்**
**அன்பு சகோதரன்**

**(பேராயர்.வே:தேவதாஸ்)**

என்னுடன் தொடர்பு கொள்ள
09377445468

சிறப்புச்செய்தி

# தாம் சொன்னபடியே இயேசு உயிர்த்தெழுந்தார்



பேராயர்
வே. தேவதாஸ்

மரித்து உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்கள். இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் பண்டிகையை உலகமெங்கும் திருச்சபைகள் சந்தோஷமாக கொண்டாடுவதைக் காட்டிலும் மிக அதிகமாக சந்தோஷத்துடன் கொண்டாட வேண்டிய பண்டிகை ஈஸ்டர் திருநாளாகும். ஏனெனில் உலகத்தின் பாவத்தை சுமந்துத் தீர்த்த தேவ ஆட்டுக்குட்டியாம் இயேசு கிறிஸ்து மூன்றாம் நாள் தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். ஆகையால் நமக்கு உண்டான பாக்கியங்கள் என்ன? என்பதை வேதத்தில் ஆராய்வோம்.

## 1. உயிர்த்தெழுதலின் நம்பிக்கையை நமக்கு தந்த இயேசு

வேதம் சொல்லுகிறது இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்பதை விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவராடேகூடக் கொண்டு வருவார். (1தெச. 4:14) இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு பாவத்தை அறிக்கை செய்து அதை விட்டுவிட்டு பாவமன்னிப்பைப் பெற்றவர்கள் அவருடைய ரத்தத்தினால் கழுவப்பட்டவர்கள், இரட்சிப்பு என்னும் புது வாழ்வு பெற்றவர்கள் அவர்கள் மரித்தாலும் இயேசு கிறிஸ்துவுக்குள் மறுபடியும் உயிர்பிக்கப்படுவார்கள். உயிரோடு இருப்பவர்களும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போகப்படுவோம். இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம். இந்த நம்பிக்கை கிறிஸ்தவனாக பிறந்ததினால் கிடைப்பதல்ல. வேதம் சொல்லுகிறது, ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலில் இணைக்கப்பட்டிருப்போம் (ரோமர் 6:5)

அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட வேண்டும். அதாவது நம்மை பாவத்திற்கு மரித்தவர்களாகவும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள். நம்முடைய பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிட்டு, பாவத்திற்கு செத்தவர்களாக ஒப்புக்கொடுக்கும் போது உயிர்த்தெழுதலின் பாக்கியத்திற்கு தேவன் நம்மை தகுதிப்படுத்துவார். அவர் வருகையில் நாமும் எடுத்துக்கொள்ளப்படுவோம். இயேசு உயிர்த்தெழுந்தார், நமக்கும் அந்த பாக்கியத்தை அவர் மரணத்தின் மூலமாக தந்துள்ளார். அல்லேலூயா!

### 2. பாவத்திலிருந்து விடுவிக்க உயர்த்தெழுந்த இயேசு:

உயிர்தெழுந்த இயேசு அப்போஸ்தலருக்கும், தம் சீஷர்களுக்கும் தம்மை வெளிப்படுத்தினார். இயேசுவின் சீஷர்கள் அவர் மரணத்திற்குப் பின்பு மிகவும் பயந்திருந்தார்கள். 'வாரத்தின் முதல் நாளாகிய அன்றைய தினம் சாயங் கால வேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்த தினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்க ளுக்குச் சமாதானம் என்றார். (யோவான் 20:19) மேலும் 26ம் வசனத்தில் மறுபடியும் எட்டுநாளைக்குப் பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள்; தோமாவும் அவர்களுடனேகூட இருந்தான்; கதவுகள் பூட்டப்பட் டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று உங்களுக்குச் சமாதானம் என்றார். வசனங்களைப் பார்க்கும்போது சீஷர்கள் யூதர்களுக்குப் பயந்தி ருந்தனர். அவர்களுக்கு மனிதர்களை குறித்த பயம் மற்றும் அதிகாரங்களைக் குறித்த பயம், மேலும் தங்களையும் இயேசுவைப் போல் கொன்றுவிடுவார்களோ என்ற மரணபயம் ஆட்கொண்டிருந்தது. ஆகவே பூட்டிய கதவுகள் மத்தியில் உயிர்த்தெழுந்த இயேசு உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக என்று பயங்களை நீக்கி சமாதானம் கொடுத்தார். தோமாவுக்கு உண்டான சந்தேகத்தை என்னுடைய விலாவில் கைகளைப் போட்டு காயங்களைத் தொட்டு பார்த்து உயிர்த்தெழுந்த இயேசுவை விசுவாசிக்க வைத்தார். அவர்கள் மீது ஊதி பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று உன்னத பெலனையும் கொடுத்தார். அவர்களுக்குள் இருந்த மனித பயம், அதிகாரங்களின் மீதான பயம், மரணபயம், எதிர்காலத்தைக் குறித்த பயம் எல்லாவற்றையும் நீக்கி புதிய நம்பிக்கையைக் கொடுத்து 'உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். (மத்தேயு 28:20)

### 3. உயிர்த்தெழுதலின் மூலம் பயத்தை நீக்கிய இயேசு:

மிகவும் பயந்து கலக்கத்தோடு இருந்த அப்போஸ்தலர்க் மற்றும் சீஷர் கள் இயேசுவின் உயிர்த்தெழுதலை கண்ணாரக் கண்ட பின்பு, அவர்களுக்குள் இருந்த மரண பயம், மனிதர்களைக் குறித்த பயம் எல்லாம் நீங்கியது. பேதுரு ஒரு வேலைக்காரியிடம் இயேசுவை மறுதலித்தார். ஆனால் உயிர்த்தெழுந்த இயேசுவை தரிசித்த பின்பு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தவர் இயேசுவே என்று பலத்த சாட்சிக் கொடுத்தார். தன்னுடைய எதிர்காலம் எப்படியிருக்குமோ என்று கலங்கி தான் மட்டும் இல்லாமல் மற்றவர்களையும் மீன்பிடிக்க அழைத்துச் சென்றான் சீமோன் பேதுரு. அவன் அவர்களை நோக்கி : மீன்பிடிக்கப் போகி றேன் என்றான். அதற்கு அவர்கள் நாங்களும் உம்முடனேகூட வருகிறோம் என் றார்கள். அவர்கள் புறப்பட்டுப்போய், உடனேபடவேறினார்கள். அந்த இராத்திரி யிலே அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை. (யோவான் 21:3) ஆனால் உயிர்த்தெ ழுந்த இயேசு கிறிஸ்து திபேரியா கடற்கரையில் தன்னை வெளிப்படுத்தி என்னை நேசிக்கிறாயா? என்று பேதுருவோடு தன் இதய பாரத்தை வெளிப்படுத்

தினார். உயிர்த்தெழுந்த இயேசுவை நேசிக்க ஒப்புக் கொடுத்த பேதுரு எல்லா சீஷர்களையும் ஒருங்கிணைத்து ஜெபத்திலே தரித்திருந்தார் என்று வேதத்தில் வாசிக்கிறோம். அந்நாட்களில் சீஷர்களில் ஏறக்குறைய நூற்றிருபது பேர் கூடியிருந்தபோது அவர்கள் நடுவிலே பேதுரு எழுந்து நின்று...(அப். 1:15) ஆவிக்குரிய வழிகாட்டும் தலைவனாக உறுதியாக நின்றார்.

இந்த இயேசுவை தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்கள் எல்லோரும் சாட்சிகளாயிருக்கிறோம். (அப். 2:32) ஜீவாதிபதியைக் கொலை செய்தீர்கள்; அவரைத் தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். (அப். 3:15)

உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும் இஸ்ரவேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது. (அப். 4:10)

கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சிக்கொடுத்தார்கள்; அவர்களெல்லார்மேலும் பூரண கிருபைஉண்டாயிருந்தது. (அப். 4:33)

தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள். (அப். 5:42)

சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள். (அப். 8:4)

ஆதி அப்போஸ்தலர் சபையில் சீஷர்களும், திருச்சபை விசுவாசிகளும், உயிர்த்தெழுந்த இயேசுவை ஆண்டவர் என்று சாட்சி கொடுத்தார். இயேசுவின் நாமத்திற்காக தாங்கள் அவமானம் அடைவதற்கு பாத்திரவான்களாக எண்ணினார்கள். நாம் உயிர்த்தெழுந்த இயேசுவை சபையில் கொண்டாடுவது மட்டுமல்லாமல், நம்முடைய தேசத்தில் ஒவ்வொரு ஜாதி மக்களுக்கும் சாட்சியாய் அறிவிப்போம். எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது;

அன்றியும் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது.

*நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்.*

*இயேசு*



# பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வேதப்புத்தகங்கள்



**கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று - அப். 13:49.**

கைகளில் வில் அம்புகளை வைத்துக்கொண்டு திருடியும், கொள்ளையடித்தும் சாராயத்தைக் காய்ச்சி குடித்தும் கொண்டிருந்த பீல் மக்கள். மந்திரப் பூஜைகள் செய்து பிசாசின் பிடியிலும், அந்தகாரத்திலும் வாழ்ந்து வந்த பீல் மக்கள் மத்தியில் ஷாலோம் தரிசனப் பணிகளை தேவன் கொண்டு வந்தது மட்டுமல்ல, மகத்துவமான காரியங்களையும் செய்திருக்கிறார்.



கடந்த 25 ஆண்டுகளில் 600 க்கும் மேலான பீல் சுதேச ஊழியர்களை எழுப்பவும் அவர்கள் மூலமாக 660 க்கும் மேற்பட்ட சபைகளை உருவாக்கவும் தேவன் கிருபை தந்துள்ளார். பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்று வருகிறார்கள்.

ஒவ்வொரு கிராம விசுவாசிகள் எங்களிடம் இந்த கறுப்புக் கலர் புத்தகம் என்னவென்று ஆவலாய் கேட்பார்கள். மேலும் எங்களுக்கு ஒன்று தாருங்கள் என கேட்டு வேதாகமத்தை வாங்கி பயபக்தியுடன் அரவணைத்து வைத்துக் கொள்வார்கள். அவர்களுக்கு இலவசமாக வேதாகமத்தைக் கொடுக்காமல் குறைந்த விலையாக ரூ. 50/-க்குக் கொடுத்து வருகிறோம்.

கடந்த ஆண்டு 6,000 க்கும் மேலானவர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். அந்த விசுவாசக் குடும்பத்தார் ஆவலுடன் வேதப்புத்தகத்தைக் கேட்கவே அவர்களுக்கு வேதப்புத்தகம் வழங்கப்பட அநேகச் சபைகள் மற்றும் தேவப்பிள்ளைகளிடம் அறிவிப்பு கொடுத்தோம். கடந்த வருடம் தேவக்கிருபையினால் சுமார் 4,000 வேதப்புத்தகங்களை வாங்கி மிகக் குறைந்த விலையில் வழங்க தேவன் கிருபைத் தந்தார்.

இவ்வருடம் 25,000 வேதப் புத்தகங்கள் குஜராத்தி, ஹிந்தி மொழியில் வழங்கப்பட வேண்டும். ஒரு வேதப் புத்தகத்திற்கு ரூ. 150/- வீதம் 25,000 வேதப்புத்தகங்களுக்கு நிதி உதவி செய்ய ஆதரவாளர்கள் தேவை. கிராமங்களில் வாழும் பீல் ஆதிவாசி மக்களுக்கு வேதப்புத்தகம் வழங்க தேவ ஜனங்களாக, குடும்பமாக, சபையாக முன் வாருங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!





# சுதேச ஊழியர் சாட்சி

எனது பெயர் அபேசிங் சங்கோடு. நான் பீல் ஆதிவாசி குடும்பத்தைச் சேர்ந்தவன்.நான் இயேசுவை அறியாதபோது சாராயம்,பீடி,தம்பாக்கு போன்ற பாவங்களுக்கு அடிமையாக வாழ்ந்து வந்தேன்.நான் காக்கா வலிப்பு வியாதியினால் மூன்று வருடங்கள் மிகவும் கஷ்டப்பட்டேன். மேலும், எனது மனைவி 7 வருடங்களாக உதிரப்போக்கு வியாதியினால் பெலவீனப்பட்டாள். இந்நிலையில் எனது அண்ணன் ஷாலோம் விசுவாசியாக சிமளியா கிராமத்திலுள்ள சபைக்கு 15 வருடங்களாக செல்லுவதால் எனக்கு இயேசுவைப் பற்றிக் கூறி,என்னை ஷாலோம் சிமளியா சபைக்கு அழைத்துச் சென்றார். அங்கு ஊழியர்.வர்சிங்பாய் அவர்கள் இயேசுவைப் பற்றி பகிர்ந்து,எங்களுக்காக ஜெபித்தார். உடனே நாங்கள் வியாதியிலிருந்து சுகத்தைப் பெற்றுக் கொண்டோம். அந்த அற்புதத்தின் மூலம் 2011-ல் குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டோம். பின்பு ஷாலோம் சிமளியா சபையில் 2013ல் ஞானஸ்நானம் பெற்று, ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்தேன். பின்பு ஊழியம் செய்ய வேண்டுமென்றபாரம் ஏற்பட்டு, 2016-ல் நான் ஊழியம் செய்ய என்னை அர்ப்பணித்து. ஷாலோம் ஊழியத்தில் இணைந்து, 1 மாத ஊழியப்பயிற்சி பெற்று,தற்போது எனது சொந்த கிராமத்தில் குடும்பமாக ஊழியம் செய்து வருகிறோம். எங்கள் கிராமம் முழுவதும் இயேசுவை அறிய வேண்டுமென்ற தரிசனத்துடன் நாங்கள் குடும்பமாக ஊழியம் செய்துவருகிறோம்.சபை இல்லாத காரணத்தினால் எங்கள் வீட்டில் வைத்து ஆராதனை நடத்துகிறோம். இந்த ஆராதனையில் 15 குடும்பங்கள் தேவனை ஆராதிக்கிறார்கள். எனக்காகவும் குடும்பத்திற்காகவும்,விரைவில் ஆலயம் கட்டப்பட, ஜெபித்துக் கொள்ளுங்கள். அல்லேலூயா!

**Sponsor Name :Bethel Blessing Assembly,(Pr.Wesly New Vegin) Marthandam**

## மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை 12.03.2017

**பெத்தேல் பிளஸ்ஸிங் அசெம்பிளி** (மார்த்தாண்டம்)



நீங்களும் சபையாக, குடும்பமாக மற்றும் ஐக்கியத்தின் மூலமாக ஜெபித்து மாதந்தோறும் ரூ.2500/ கொடுத்து சுதேச ஊழியரை தாங்க முன்வரலாம்

# மிஷனெரி வாழ்க்கை வரலாறு

## ஸ்தேவான்

கிறிஸ்தவ உலகில் முதல் இரத்தச்சாட்சியாக மரித்தவர் ஸ்தேவான். இவர் கிரேக்க மொழி பேசும் ஒரு யூதர்! அப்போது எருசலேமில் ஆயிரக்கணக்கான கிரேக்க மொழி பேசும் கிறிஸ்தவர்கள் இருந்தனர்.



### ஸ்தேவானின் ஊழியம்

அப்போஸ்தலர் நடபடிகளில் 6:5 முதல் 9:2 வரையுள்ள வசனங்களில் ஸ்தேவானைப் பற்றிய செய்தியைக் காண்கிறோம். இவரது மனமாற்றத்தைப் பற்றியும், கிறிஸ்தவரானது பற்றியும் ஒன்றுமே கூறப்படவில்லை. இவர் 70 சீடர்களுள் ஒருவராக இருக்கலாம்; அல்லது அப்போஸ்தலர்களின் துவக்க கால ஊழியத்தின் பயனாகக் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களில் ஒருவராக இருக்கலாம். என்றாலும் ஸ்தேவான் எருசலேம் சபையில் செல்வாக்குப் பெற்ற ஒருவராக இருந்தார் என்பதை நாமறிகிறோம். பந்தி விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஏழு பேரில் ஸ்தேவான் முதலாவதாகக் குறிக்கப்பட்டுள்ளார் (அப். 6:5). கிரேக்க விதவைகளுக்கான அன்றாடஉணவு பற்றிக் கவனிப்பது இவர்கள் பொறுப்பாக இருந்தது. இவர்களின் ஊழியத்தின் பலனாக சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று (6:7). ஸ்தேவான் விசுவாசத்தினாலும், வல்லமையினாலும் நிறைந்தவர் (6:8); பரிசுத்த ஆவியானவரின் நிறைவையும் பெற்றவர். பந்தி விசாரணை ஊழியத்தோடு நின்றுவிடாமல் ஞானத்தோடும், ஆவியின் நிறைவோடும் நற்செய்தியை அறிவித்தார் (6:10). பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தார் (6:8]

### ஸ்தேவான் கைது செய்யப்படுதல்

கிரேக்க மொழி பேசும் யூதருடைய ஆலயங்களில் ஸ்தேவான் கிறிஸ்துவைப் பற்றிச் சாட்சி கூறிவந்தார். இதனால் அவர்கள் இவருக்கு எதிராக விவாதம்பண்ணத் துவங்கினார்கள். 'அவன் பேசிய ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்து நிற்க அவர்களால் கூடாமற்போயிற்று (6:10). இதனால் எரிச்சலுற்ற யூதர்கள் பொய்ச்சாட்சிகளைத் தயார் செய்து, ஸ்தேவானைப் பிடித்து இழுத்து ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாகக் கொண்டு போனார்கள். பரிசுத்த ஸ்தலத்துக்கும், வேதப் பிரமாணத்துக்கும் விரோதமாகத் தூஷணம் செய்பவர்களுக்கு மரண தண்டனை அளிக்கப்படக் கூடுமாதலால் (லேவி. 24:14-16) ஸ்தேவானைக் கொலை செய்யும் நோக்கத்தோடு இவ்வாறு கூறினார்கள். கிறிஸ்துவுக்கு விரோதமாகவும் இதே தேவ தூஷணக் குற்றச்சாட்டையே கூறினார்கள். (மத். 26:65) அவருக்கு விரோதமாகவும் பொய்ச்சாட்சி சொன்னார்கள் (மாற்கு 14:58). கிறிஸ்தவர்கள் யூத மதக் கலாச்சாரத்தையும் யூதர்களின் தனித்தன்மையையும் அழித்து விடுவார்கள் என்று அப்போது யூதமதத் தலைவர்களிடையே நிலவிய அச்சத்தின் காரணமாகவே இத்தகைய குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டன. இவ்வாறு மற்றவர்கள் பொய்ச் சாட்சிகளைச் சொல்லும் போது, ஸ்தேவானின் முகம் தேவதூதன் முகம் போலிருப்பதை ஆலோசனை சங்கத்தார் கண்டார்கள் (அப். 6:15). என்றாலும் அவர்கள் மனதைக் கல்லாக்கிக் கொண்டார்கள்.

### ஸ்தேவானின் விசுவாச அறிக்கை

ஆலோசனைச் சங்கத்தாரின் நோக்கத்தை நன்கு அறிந்துகொண்ட பின்னரும் ஸ்தேவான் பின்வாங்கவில்லை. விசுவாசத்தில் தளர்ச்சியடையவில்லை. நற்செய்தியை

ஆதாரமாகக் கொண்டு ஸ்தேவான் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்தார். ஒருவேளை அவர்கள் வேத வசனங்களின் சத்தியத்தை ஏற்றுக் கொண்டால் அவர் விடுதலை செய்யப்படுவார். இல்லையென்றாலும்கூட அந்தச் சத்திய வார்த்தைகள் கேட்பவர்கள் ஒரு சிலரின் மனதிலாவது கிரியை செய்யும் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. ஸ்தேவானுக்கு எதிராகக் குற்றம் சாட்டியவர்களும் பழைய ஏற்பாட்டு சத்தியங்களை விசுவாசித்தவர்கள்தாம். வேறுபாடு என்னவென்றால் ஸ்தேவான் பழைய ஏற்பாட்டு வரலாற்றை தீர்க்கதரிசன கண்ணோட்டத்தில் எடுத்துரைத்தார். அவர்களோ நியாயப்பிரமாணத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களின் வரலாற்று பூர்வமான வெளிப்பாடாகவே இயேசு வந்தார் என்றும் யூதர்கள் அவரைக் கொலை செய்தது தவறு என்றும் ஆணித்தரமாக எடுத்துக் கூறினார் ஸ்தேவான். தீர்க்கதரிசனங்களின் வெளிப்பாடுகளை ஒதுக்கிவிட்டு, நீதிபரராக வந்த இயேசுவைக் கொலை செய்த அவர்களே துரோகிகள் என்றும், பாதகர்கள் என்றும் அவர்கள் மீது பதில் குற்றம் சாட்டினார் (7:52). தன்னைக் கொல்லக் காத்திருப்பவர்களின் முன்னால் நின்று அவர்களே குற்றவாளிகள் என்று வேத வசன ஆதாரங்களுடன் அவர் நிரூபித்ததைக் காணும்போது கிறிஸ்துவுக்காகச் சாவின் முன்னால்கூட துணிவுடன் நிற்கும் அவரது விசுவாசம் புலப்படுகின்றதல்லவா?

### *இரத்தசாட்சி மரணம்*

ஸ்தேவான் கூறியதைக் கேட்டவுடன் சங்கத்தினர் கடும்கோபமடைந்தார்கள்; 'பல்லைக் கடித்தார்கள் என்று வேதாகமம் கூறுகிறது (7:54) இதைக் கண்ட பிறகாவது ஸ்தேவான் மனம் தளர்ந்து போனாரா? இல்லவே இல்லை. தான் விசுவாசித்த கிறிஸ்துவின் மீது காலத்தால் அழிக்க முடியாத விசுவாசஅறிக்கை செய்கிறார்: "அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும் மனுஷ குமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன்" (அப். 7:56) அவர் விசுவாசித்தகிறிஸ்து அவரைக் கைவிட்டு விடவில்லை! அந்த வேளையில் அவருக்காகப்பரிந்து பேசுகிறவராக தேவனுடைய வலது பாரிசத்தில் நின்று கொண்டிருந்தார்!இதைக் கேட்டவுடன் யூதத் தலைவர்களின் கோபம் மூர்க்கமாக மாறியது! சட்டப்படியான மரணத்தண்டனையை அறிவிப்பதைக்கூட மறந்துவிட்டார்கள்! ஸ்தேவானை நகரத்துக்கு வெளியே தள்ளி, அவர்மீது கல்லெறியத் துவங்கி விட்டார்கள். நிச்சயமாகமரிக்கப் போகிறோம் என்பதை அறிந்த பின்னரும்கூட அவரது விசுவாசம் சிறிதளவேனும் குறையவேயில்லை. மீண்டும் கிறிஸ்துவின் மீதான தனது விசுவாசத்தைஉறுதிப்படுத்துகிறார்: " கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்" என்று ஜெபிக்கிறார் (7:59) மரணத்தின் கடைசி நிமிடத்திலும் அவர்களுக்காக ஜெபிக்கிறார்; அவருக்குக் கொடுக்கப்பட்ட கடைசி நொடியிலும் இயேசுவின் வார்த்தைக்கே (பகைவனையும் நேசி) இடம் கொடுக்கிறோம் என்ற மன நிம்மதியோடு சத்தமிட்டு ஜெபிக்கிறார்! மரணத்தை ஏற்றுக் கொள்கிறார்! அவரது பேச்சினால் தொடப்பட்டவர்களைவிட அவரது இந்தக் கடைசி ஜெபத்தினால் தொடப்பட்டவர்கள் அநேகர் இருந்திருப்பர் என்பது திண்ணம்.

### *பின் விளைவுகள்*

முதல் இரத்தச்சாட்சி மரணத்திற்கு உடனடியாகப் பலன் கிடைத்தது. தொடர்ந்து வந்த சித்திரவதைகளினால் சபை சிதறடிக்கப்பட்டுப் போனாலும், சிதறடிக்கப்பட்டோர் சென்றஇடங்களிலெல்லாம் நற்செய்தி வேரூன்றிப் பலன் தந்தது. ஓடிப்போனவர்கள் ஒளிந்து கொள்ளவில்லை! " சிதறிப் போனவர்கள் எங்குத்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள். " (8:4) ஸ்தேவானின் சாட்சியும், ஜெபமும், இரத்தச்சாட்சி மரணமும் அதைக் கண்ட சவுலின் மனதிலும் கிரியை செய்திருக்கும் என்பதில் ஐயமில்லை. **அகஸ்டின் கூறுகிறார் -- "ஸ்தேவான் ஜெபித்திருக்காவிட்டால், திருச்சபைக்குப் பவுல் கிடைத்திருக்க மாட்டார்."**

# தூத்துக்குடி தலைமை அலுவலக பணியாளர்கள் பணித்தள வருகை 24.02.2017 முதல் 26.02.2017 வரை

கர்த்தருடைய அநாதி தீர்மானத்தின்படி தூத்துக்குடி தலைமை அலுவலகத்திலிருந்து நாங்கள் (சகோதரி சாந்தி, சகோதரி ஜெபராணி, சகோதரி பால் செல்வி, சகோதரி ப்ரீத்தி மற்றும் சகோதரர் ஆசீர்வாதம் குடும்பத்தார் ) 21ம் தேதி மாலை தூத்துக்குடியிலிருந்து புறப்பட்டு 23ம் தேதி மாலை பணித்தளத்திற்கு (வடோதாரா) போய் சேர்ந்தோம். 24ம் தேதி குஜராத்திலுள்ள ஜெரி கிராம ஆலயத்தை பார்வையிட்டோம். பின் தெல்சர் கிராம ஆலயத்தில் நடைபெற்ற உபவாச ஜெபத்தில் கலந்துக் கொண்டோம். அங்கு எங்களுக்கு அங்குள்ள மக்கள் வரவேற்பு கொடுத்தார்கள். கூட்டம் முடிந்ததும் அங்குள்ள அனைத்து மக்களும் எங்களிடம் வந்து ஜெய் ஈஷூ என்று கைகொடுத்து சந்தோஷப்படுத்தினார்கள்.

பின் 25ம் தேதி இராஜஸ்தானில் உள்ள கோய்கா ஆலயம், தோலா காக்ரா ஆலயத்தை பார்வையிட்டோம். பின் நம் பீல் சிறுவர்கள் படிக்கும் பள்ளி விடுதியைக் காணச் சென்றோம். அங்குள்ள சிறுவர்கள் படிக்கும் அறையும், படுக்கும் அறையும் ஒன்றாக இருப்பதை பார்த்து கண்கலங்கினோம். கர்த்தர் சீக்கிரமாக இந்த பிள்ளைகளுக்கு பள்ளியையும், அவர்கள் தங்குவதற்கு தனியாக விடுதியையும் கட்டிக் கொடுக்கும்படியாக கர்த்தரிடம் மன்றாடினோம். பின் 26ம் தேதி நாங்கள் மத்தியப் பிரதேசத்திலுள்ள பிட்டோல் ஆலயத்திற்குச் சென்றோம். அந்த ஆலயம் பெரிய ஆலயமாக இருந்தது. கீழே சிறுவர்களுக்கான ஞாயிறு பள்ளி நடந்துக் கொண்டிருந்தது. அதிலே முதலாவதாக ஜெபித்து ஆராதித்துக் கொண்டிருக்கும் போது சிறுவர்கள் அநேகர் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு அபிஷேகத்தில் நிரம்பி ஆராதிப்பதைக் காணும்போது எங்களுக்கு உண்மையாகவே ஒரே வியப்பாக இருந்தது. சிறு பிள்ளைகள் எவ்வளவாக கர்த்தரை ஆராதிக்கிறார்கள் என்று கர்த்தரை மகிமைப்படுத்தினோம். பின் மேல்மாடியில் நடந்துக் கொண்டிருந்த ஆராதனையில் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களுடன் கலந்துக் கொண்டோம். அங்கும் எங்களுக்கு அங்குள்ள மக்கள் வரவேற்பு கொடுத்தார்கள். ஆராதனை எங்களுக்கு மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. ஒவ்வொரு சாட்சிகளும் எங்களை வியக்க வைத்தது.நாங்களும் அந்த மக்களுடன் சேர்ந்து ஆடிப்பாடி ஆராதித்தது எங்கள் வாழ்க்கையில் மறக்கமுடியாத ஒரு நாளாக அமைந்தது. எங்களை பிஷப் தேவதாஸ் அவர்களும், சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களும் ஒரு தாய் தகப்பனை போல கவனித்துக் கொண்டார்கள். எங்களுக்கு உதவிசெய்த அனைத்து சகோதர, சகோதரரிகளுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். எங்களுக்கு ஆலயத்தை எல்லாம் காண்பித்து எங்களுக்கு உதவியாக இருந்த சகோ. சாமுவேல் அவர்களுக்காக தேவனைத் துதிக்கிறோம். நாங்கள் பணித்தளத்தில் இருந்த 3 நாட்களும் எங்களுக்காக உணவை தயார் செய்து கொடுத்த சகோ. குமார் அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். கர்த்தர் எங்களை இந்த பணித்தளத்திற்கு அழைத்துச் சென்றது அவருடைய பெரிதான கிருபை என்றே சொல்லவேண்டும். இந்த பீல் மக்களுக்காக இன்னும் அதிகமாக ஜெபிக்கும்படியாக கர்த்தர் எங்களுக்கு ஒரு பாரத்தைக் கொடுத்திருக்கிறார் கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

சகோதரி சாந்தி, சகோதரி ஜெபராணி, சகோதரி பால்செல்வி,சகோதரி ப்ரீத்தி மற்றும் சகோதரர் ஆசீர்வாதம் குடும்பத்தார்.

# தூத்துக்குடி தலைமை அலுவலக பணியாளர்கள் பணித்தள வருகை
## 24.02.2017 முதல் 26.02.2017 வரை


ஷாலோம் கிராம ஆலயம் முன்பு...


ஷாலோம் கிராம ஆலயம் முன்பு...


ஷாலோம் கிராம ஆலயம் முன்பு...


கலாச்சார வரவேற்பு


தலைமை அலுவலக சகோதரிகளின் அறிமுகம்...


தலைமை அலுவலக சகோதரிகளின் அறிமுகம்...


தலைமை அலுவலக சகோதரிகளின் சாட்சியின்போது...


சகோ. ஆசீர்வாதம் அவர்கள் குடும்பம்...


சகோதரி ப்ரீத்தி அறிமுகத்தின் போது...


தலைமை அலுவலக சகோதரிகளின் பாடல்வேளை...

# நாகர்கோவில் சகோதரனுடைய பணித்தள அறிக்கை

நானும், என் மனைவியும் பேராயர் தேவதாஸ், அவர்கள் மனைவி சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் ஊழியம் செய்து கொண்டிருக்கும் பணித் தளத்தை பார்வையிட மார்ச் 3 முதல் 5 வரை குஜராத், மத்தியப்பிரதேசம், இரா ஜஸ்தான் ஆகிய 3 மாநிலங்களில் சென்று பார்வையிட்டோம். அங்குள்ள பிட்டோல், துவாதாரா, காப்பிரியா, போர்கேடா, தெல்சர், ஆகிய ஷாலோம் கிராம ஆலயங்களைப் பார்வையிட்டோம். அந்தர்வேலியா ஊழியர் கூடுகையில் நாங் கள் கலந்துக் கொண்டோம் அங்கு எங்களுக்கு பீல் மக்கள் கலாச்சார வரவேற்பு கொடுக்கப்பட்டது. அங்கு நானும் எனது மனைவியும் எங்களது சாட்சிகளை பகிர்ந்துக் கொண்டோம்.

பின்பு ஷாலோம் பணித்தள அலுவலகத்தை சென்று பார்வையிடவும் கர்த்தர் கிருபை செய்தார். அவர்கள் மத்தியில் பேராயர் தேவதாஸ், சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் செய்யும் ஊழியங்கள் எங்களை மிகவும் கவர்ந்தது. பின்பு மார்ச் 5ம் தேதி காக்கரதாரா ஆலயத்தை பிரதிஷ்டை பண்ண கர்த்தர் கிருபை பாராட்டினார். அந்த பீல் மக்கள் ஆராதிப்பதைக் கண்டு வியந்து அந்த மக்களைக் கண்டதும் நானும் எனது மனைவியும் கண்ணீர்விட்டு அழுது விட் டோம். எங்களுக்கு பீல் மக்களைக் குறித்த பாரம் அதிகமாகி விட்டது. நாங்கள் கூறுகிறோம், இந்த பீல் மக்கள் மத்தியில் செய்யப்படுகிற இந்த ஊழியம் உண் மையாக பாரத்தோடு செய்யப்படுகிறது. இந்த மக்களுக்காக நாம் அநேக ஆதர வாளர்களை எழுப்பி இவர்களைத் தாங்கவும், ஆலயம் இல்லாத இடங்களில் நாம் பீல் மக்களுக்கு ஆலயங்களைக் கட்டிக் கொடுக்கவும் இதை வாசிக்கிற அன்பு சகோதர, சகோதரிகளுக்கு அன்பாய் கேட்டுக் கொள்கிறேன்.














# ஷாலோம் ஊழியத்திற்கான உங்கள் பங்கினை இந்த வருடம் அனுப்பிவிட்டீர்களா ?

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

உங்கள் கரங்களில் கிடைக்கும் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் ஆத்துமப் பாரத்துடன் வட இந்தியாவில் தேவன் தந்த தரிசனப் பணியான மிஷனெரிப் பணித்தளச் செய்திகளையும். தேவனுடைய வார்த்தைகளையும். ஜீவனுள்ள சாட்சிகளையும். மிஷனெரி வாழ்க்கை வரலாறுகளையும் மற்றும் ஆவியானவரால் கொடுக்கப்படும் காரியங்களையும் சுமந்து வருகிறது, இம்மலருக்காக அதிகமாக ஜெபித்து. உழைத்து. அநேகச் செலவுகளைச் செய்து அனுப்புகிறோம்,

இந்த தரிசனப்பணியை. தேவன் பேரில் கொண்ட அன்பின் நிமித்தமாக. தியாகத்துடனும். ஆத்துமப் பாரத்துடனும் மாதந்தோறும் /வருடந்தோறும் தாங்கி வரும் ஆதரவாளர்களுக்காகத் தேவனைத் துதிக்கிறேன், இப்படிஜெபித்து. ஊழியங்களைத் தாங்கிவரும் ஆதரவாளர்கள் மாதந்தோறும்ஊழியங்களை அறிந்து தேவனைத் துதிக்கவும். மேலும் பாரத்துடன் ஜெபிக்கவும் இம்மலர் அனுப்பப்படுகிறது, ஆனால் அநேகர் இந்த ஊழியத்திற்காகவோ. இந்த பத்திரிகைகளுக்காகவோ வருடத்திற்கு ஒரு முறை கூட காணிக்கை அனுப்பவில்லை,

பீல் ஆதிவாசி மக்களின் மத்தியில் நடைபெறும் மிஷனெரி ஊழியங்களுக்காக செலவு செய்யப்படும் இப்பணிக்காக. இம்மலரை வாசிக்கும் அன்பர்கள் இந்த வருடத்தில் ஒருமுறை கூட காணிக்கை அனுப்பவில்லையெனில். தயவாக உங்கள் அன்பின் பங்கினை ஜெபித்து அனுப்பி. ஊழியங்களைத் தாங்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன், அல்லது குறைந்தது பத்திரிகை வருடச்சந்தா காணிக்கையான ரூ, 100/- ஐ அனுப்ப வேண்டுகிறோம்,

அப்படியாக நீங்கள் வருடத்திற்கு ஒருமுறை. குறிப்பாக இந்த மாதத்திற்குள்ளாக காணிக்கை அனுப்பும்படி அன்புடன் கேட்கிறோம், அப்படி நீங்கள் காணிக்கை அனுப்பாத பட்சத்தில். நிதி நெருக்கடியின் காரணத்தினால் எங்களால் தங்களுக்கு பத்திரிகை அனுப்ப இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்,

நீங்கள் அனுப்பும் தியாகமான காணிக்கையை நாங்கள் வரவேற்கிறோம். உங்கள் குடும்பத்தையும். சந்ததியையும் தொடர்ந்து தேவன் ஆசீர்வதிப்பாராக




காக்கரதாரா என்ற கிராமம் மத்தியப்பிரதேசத்திலுள்ள ஜாபுவா தாலுகாவில் அமைந்துள்ளது. ஊழியர் ரமேஷ் புரியா அவர்கள் இயேசுவை அறியாத போது இறந்த ஆவிகளை வணங்கி, சாராயம் காய்ச்சி விற்றும், குடித்தும் கொண்டிருந்தார். இவருடைய வீட்டில் உள்ளவர்கள் பிசாசின் பிடியில் இருந்ததால் வீட்டில் அமைதி இல்லாமல் வீட்டில் பிசாசு குதித்துக் கொண்டு அலைக்கழித்துக் கொண்டிருந்த வேளையில் அந்தர்வேலியா கிராமத்துக்கு சென்று ஜெபத்தில் கலந்துக் கொண்டபோது கர்த்தர் அனைவருக்கும் பூரண விடுதலையைக் கொடுத்தார். வீட்டில் பிசாசு குதிப்பதெல்லாம் முற்றிலுமாக மாறிவிட்டது. இந்த அற்புதத்தின் மூலமாக முழுக் குடும்பமும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். அதன் பின் ரமேஷ் புரியா தனது வீட்டில் 5 பேர்கள் கூடி ஜெபிக்க ஆரம்பித்தார்கள். அந்த வேளையில் தேர்சிங்பாய் புரியா அவர்கள் வீட்டில் இரவு நேரத்தில் பிசாசு மேலிருந்து கீழும், கீழிலிருந்து மேலுமாக குதித்துக் கொண்டிருந்தது. முழுக் குடும்பமும் கலங்கிக் கொண்டு ஊழியர் ரமேஷ் புரியா அவர்களிடத்தில் ஜெபிக்க வந்தார்கள். ஊழியர் ஜெபித்ததில் பூரண விடுதலைக் கிடைத்தது. இதினிமித்தம் அநேகர் விசுவாசிக்கத் தொடங்கினர். பின் இவரது இடத்தில் சபையில் ஆராதித்து வந்தார்கள். அநேகர் ஆராதிக்க வரவே அதே இடத்தில் புதியதாக ஆலயம் கட்டி 05.03.2017 அன்று பேராயர் தேவதாஸ் அவர்கள் ஜெபிக்க நாகர்கோவிலைச் சேர்ந்த சகோதரர் ஆலயத்தை பிரதிஷ்டை செய்தார்கள். இந்த கிராம ஆலயம் நாகர்கோவிலைச் சேர்ந்த சகோதரர் சார்பில் வழங்கப்பட்ட நிதியுதவியின் மூலம் கட்டி முடிக்கப்பட்டது.

# கிராம ஆலயங்களை எழுந்துகட்டுவோம் வாருங்கள்

தேவ கிருபையால் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் ஷாலோம் ஊழியங்கள் மூலமாக கடந்த 25 வருடங்களாக 600க்கும் அதிகமான பீல் சுதேச ஊழியர் குடும்பங்களை எழுப்பி பயிற்சியளிக்க தேவன் கிருபை தந்தார். அவர்கள் மூலமாக பரிசுத்த ஆவியானவரின் வல்லமை வெளிபடத்தக்கதாக அற்புத அடையாளங்களுடன் சுமார் 700 கிராமங்களில் சபைகள் உருவாக்க தேவன் கிருபை தந்தார். தேவகிருபையினாலும் அநேக தேவஜனங்களின் உதாரத்துவமான காணிக்கைகளினாலும் சுமார் 350 கிராமங்களில்ஆலயங்கள் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. தேவனுக்கே மகிமை!



கர்த்தருக்கு சித்தமானால் இந்த வெள்ளிவிழா (2017) ஆண்டில் **200 கிராமங்களில் ஆலயங்கள் கட்டி பிரதிஷ்டை** செய்யப்பட தீர்மானித்து செயல்பட்டு வருகிறோம். உடனடியாக **100** கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்பட வாய்ப்புகள் உருவாகியுள்ளது. **(35X 20 ) ( 40 X 20) ( 50 X 20 )** அளவுகளில் கட்டுவதற்கு **ரூ. 2 இலட்சங்கள், ரூ. 3 இலட்சங்கள் ரூ. 5 இலட்சங்கள்** ஜெபித்து கொடுத்து தாங்கக்கூடிய நிதி ஆதரவாளர்கள் உடனடியாக தேவை உங்கள் குடும்பத்தின் சார்பிலோ சபையின் சார்பிலோ கட்டி கொடுக்கமுன்வாருங்கள்.

கிராம ஆலயம் கட்டி முடித்த பின்பு தாங்குகிற நீங்களே வந்து பிரதிஷ்டை ஆராதனைகளில் பங்கு கொள்ளலாம். பிரதிஷ்டை ஆராதனை DVD மற்றும் புகைப்பட ஆல்பத்தை தங்களுக்கு அனுப்பிவைப்போம். முழு ஆலய கட்டிட நிதி தர இயலாவிட்டாலும் **ரூ. 1 இலட்சம் ரூ. 50,000/- ரூ. 10,000/-** இல்லையெனில் முடிந்த நிதிஉதவி தந்து பங்காளர்களாக இணைந்து கட்டி கொடுக்க முன் வரலாம்.

நிதிஉதவி **Sharing Love Mission** பெயரில் செக் அல்லது DD அல்லது Net Transfer ல் அனுப்பி எங்களுக்கு தகவல் அறிவிக்கவும்.

''நான் இன்றுமுதல் உங்களை ஆசீர்வதிப்பேன்''.-ஆகாய்.2:19

# FMMI ஷாலோம் இலவச மருத்துவ முகாம் 2017

கர்த்தருடைய அநாதி தீர்மானத்தின்படி நமது பணித்தளத்தில் கடந்த மார்ச் மாதம் 9, 10, 11 ஆகிய மூன்று நாட்களும் இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், குஜராத் ஆகிய 3 மாநிலங்களிலும் 6 இடங்களில் 2 பிரிவினராக Bro. E. Pushparaj (Founder & President, FMMI) தலைமையில் Dr. Joy Patricia - Chennai, Dr. Beula - Surat, Dr. Srinivasa Murthy , Dr.Amutha Srinivasa Murthy - Nagercoil, Dr. Sudharsini - Chennai, Dr. Leo Clington, Dr. Balaji, Mr. James Arullappa, (Pharmacist - Ngl.) Mr. Sam George,(Pharmacist - Kerala), Mr. Gunaseelan- Surat, Mr. Yokesh - Nagercoil, Bro. Ramesh (Co-ordinator,FMMI) கலந்துக் கொண்டு சுமார் 1800 பீல் ஆதிவாசி மக்களுக்கு மருத்துவ சிகிச்சையளிக்கப்பட்டது.

இந்த முகாமின் போது கண் புரவை அறுவை சிகிச்சை மற்றும் பொது அறுவை சிகிச்சை இம்மக்களுக்கு செய்யப்படாமலே வாழ்ந்து வருகின்ற பரிதாப நிலமை காணப்படுவதாகவும், இதைக் குறித்த பாரம் தங்களுக்கு அதிகமாக உள்ளதால் மிக விரைவில் கண் அறுவை சிகிச்சை மற்றும் பொது அறுவை சிகிச்சை செய்ய முயற்சி பண்ணுவதாக கூறினார்கள். மேலும் இனிமேல் வருடம் இரண்டுமுறை பணித்தளத்திற்கு சென்று மருத்துவ முகாம் மற்றும் அறுவை சிகிச்சை முகாம் நடத்த ஆயத்தமாக உள்ளோம் என்றும் கூறியுள்ளார்கள். மருத்துவ முகாம் கர்த்தருடைய கிருபையினால் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது.









# FMMI ஷாலோம்
# இலவச மருத்துவ முகாம் 2017



















# Friends Medical Mission International

(Regn. No. 00165/2015)

No. 89/22-A, Henry Road, Opp. Scott Christian Higher Secondary School,
Nagercoil – 629 001. Kanyakumari District. Tamil Nadu. South India.

Mobile No. +91 95003 32949 Office : +91 4652 279949

E-mail : mail@fmmionline.com Website : www.fmmionline.com


Date : 15/03/2017

To
Rev. Dr. V. Devadass
Founder & General Secretary,
Sharing Love Mission.

Dear Bishop in Christ,

கிறிஸ்துவுக்குள் பிரியமான Shalom – Bishop, Rev. Dr. V. Devadass அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் FMMI ஊழியத்தின் சார்பாக எங்கள் அன்பின் நல்வாழ்த்துக்கள். தங்களின் அழைப்பின் பெயரில் கடந்த மார்ச் மாதம் 9, 10, 11 ஆகிய மூன்று நாட்கள் Bro. E. Pushparaj (Founder & President, FMMI) தலைமையில் Dr. Joy Patricia – Chennai, Dr. Beula – Surat, Dr. Srinivasa Murthy, Dr. Amutha Srinivasa Murthy – Nagercoil, Dr. Sudharsini – Chennai, Dr. Leo Clington, Dr. Balaji, Mr. James Arullappa (Parmacist – Ngl), Mr. Sam George (Pharmacist – Kerala), Mr. Gunaseelan – Surat, Mr. Yokesh – Ngl, Bro. Ramesh (Co-ordinator – FMMI) ஆகியோர் இந்த முகாமில் கலந்து கொண்டு, Rajasthan, Madhya Pradesh, Gujarat ஆகிய மூன்று மாநிலங்களிலும் 6 இடங்களில் 2 பிரிவினராக கடந்து சென்று சுமார் 1800 பீல் ஆதிவாசி மக்களுக்கு மருத்துவ சிகிட்சையளிக்கப்பட்டது. இந்த முகாமின் போது கண் புரவை அறுவை சிகிட்சை மற்றும் பொது அறுவை சிகிட்சை இம்மக்களுக்கு மிக, மிகத் தேவையாக காணப்படுகிறது. பீல் அதிவாசி மக்களை பொறுத்தவரையில் மிகவும் ஏழ்மை சூழ்நிலைமையில் இருப்பதால் அறுவை சிகிட்சை செய்யப்படாமலே வாழ்ந்து வருகின்ற பரிதாப நிலைமை காணப்படுகிறது. ஆககே FMMI குழுவினருக்கு அந்த மக்களைக் குறித்த பாரம் ஏற்பட்ட படியினால் மிக விரைவில் கண் அறுவை சிகிட்சை மற்றும் பொது அறுவை சிகிட்சை செய்ய முயற்சி பண்ணிக் கொண்டிருக்கிறோம்.

Bishop Devadas அவர்களின் பீல் மக்களைக் குறித்த பாரம், தரிசனம் எங்களை ஆச்சரியத்தில் வைத்தது. Bishop அவர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் நன்கு உபசரிக்கவும், ஒருங்கிணைப்புகளும் மிக நேர்த்தியாக இருந்தது. சுமார் 15 ஆண்டுகளுக்கு முன் நான் சென்ற போது காணப்பட்ட சூழ்நிலைகள் மிகவும் மோசமாக காணப்பட்டன. ஆனால் இப்பொழுது அம்மக்கள், சுத்தமாகவும், கல்வி கற்றும், இயேசுவை முழுமனதோடு ஆராதிப்பதிலும், ஜெபிப்பதிலும் அதிக ஆர்வம் காட்டுகின்றனர், இதற்கு காரணம் பீல் ஆதிவாசி மக்களை இயேசு அதிகமாக நேசிப்பதினால் மாத்திரமே, அதோடு SHALOM ஊழியங்களிலுள்ள ஒவ்வொருவரின் கடின உழைப்பு மற்றும் அதிக பாரம், அதோடு கூட நமது FMMI க்கும் அம்மக்களைக் குறித்த பாரம், எனவே தான் வருடம் இரண்டு முறை சென்று மருத்துவ முாகம் மற்றம் அறுவை சிட்சை முகாம் நடத்த ஆயத்தமாயுள்ளோம்.

பீல் ஆதிவாசி இயேசுவுக்கே.....

கிறிஸ்துவின் பணியில்

Bro. E. Pushparaj

Mr. E. Ram Kumar @ Pushpa Raj
Founder & President

Dr. R. Suresh Premil Kumar
Secretary

Dr. Litta Jeyakumari
Treasurer

# சிறுவர் வேதாகம வகுப்பு 2017 CBC (VBS)





பிரியமானவர்களே. நமது ஷாலோம் கிராம சபைகளிலுள்ள பீல் ஆதிவாசி சிறுவர்களைத் தேவன் மிகவும் நேசித்து. தமது கிருபையால் ஆசீர்வதித்து. அவர்களை ஞானத்தினால் நிரப்பி கல்வி அறிவைத் தந்து வருவதால். அவர்கள் இயேசு கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு வேத அறிவிலும் வளர்ந்து வருகின்றனர், இந்தச் சிறுவர்களை ஸ்திரப்படுத்தும்படியாக ஒவ்வொரு ஞாயிறு தோறும் நமது ஷாலோம் திருச்சபைகளில் ஞாயிறு வேதப் பள்ளிகளும். சிறுவர் மற்றும் வாலிபர்களுக்கான சிறப்பு முகாம்கள் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகின்றன,

மேலும் ஒவ்வொரு ஆண்டும் பள்ளி விடுமுறை நாட்களாகிய மே மாதத்தில் சிறுவர் வேதாகமப் பள்ளி (CBC-Children Bible Class) நடத்தப்பட்டு வருகிறது. இந்தப் பள்ளிகளில் ஆயிரமாயிரம் சிறுவர்கள் கலந்துக் கொண்டு ஆசீர்வாதம் பெற்று வருகின்றனர். கடந்த 2016 ஆம் ஆண்டில் மாதிரியாயிரு என்ற தலைப்பில் நடத்தப்பட்ட CBC வகுப்புகளில் 35,000க்கும் அதிகமான சிறுவர்கள் கலந்துக் கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர், இதற்கான தேவைகளை சந்தித்து வரும் பங்காளர்களாகிய உங்கள் யாவருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்,

அதே போல் இந்த ஆண்டும் எழும்பிப்பிரகாசி என்ற தலைப்பில் 600 கிராமங்களில் 50,000க்கும் அதிகமான சிறுவர்களுக்கு CBC நடத்த ஜெபத்துடன் ஆயத்தப்பட்டு வருகிறோம், இதற்கான தேவைகள் 600 ஆசிரியர்களுக்கானப் பயிற்சிக் கையேடுகள். 50,000 CBC புத்தகங்கள். Badge, (50,000), பாட்டுப் புத்தகங்கள் (15,000). கலர் பென்சில்கள், ஸ்கெட்ச் பேனாக்கள் (5000 Sets), CBC புத்தகங்கள் நேர்த்தியாக பிரிண்ட் செய்யவும், மற்ற பொருட்கள் கொடுக்கவும் ஒரு குழந்தைக்கு தலா ரூ. 30/- வீதம் 50,000 மாணவர்களுக்கு ரூ. 15 இலட்சங்கள் தேவைப்படுகிறது, இந்தத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள், மேலும் உங்கள் குடும்பத்தின் மற்றும் ஊழியத்தின் சார்பில் அல்லது சபையின் சார்பிலோ ஒரு மாணவருக்கு ரூ. 30/- வீதம் உங்களால் முடிந்த அளவிலான காணிக்கையை மாணவர்களுக்குக் கொடுத்து இந்தச் சிறுவர் ஊழியத்தைத் தாங்க முன்வாருங்கள்,

தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தின் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக!




...மிகவும் சிறியவராகிய
என் சகோதரரான
இவர்களில் ஒருவனுக்கு
நீங்கள் எதைச் செய்தீர்களோ,
அதை எனக்கே செய்தீர்கள்....
- *(இயேசு) மத்தேயு 25:40*

## ஷாலோம் ஊழியத்தின்

# அவசர மற்றும் அவசியத் தேவைகள்



● மூத்த சுதேச ஊழியர்களான தலைவர்களுக்கு, ஒவ்வொருவரும் 20 கிராம சபைகளை கண்காணிக்கவும், வெளி ஊழியங்களுக்குச் செல்லவும் ரூ. 50,000/- மதிப்பில் 50 மோட்டார் சைக்கிள்கள் தேவை.



● கிராமங்கள் தோறும் இயேசு திரைப்படத்தின் மூலமாக சுவிசேஷம் அறிவிக்க சுமார் ரூ.40,000 மதிப்புள்ள 8 L.C.D Projector உடனடியாகத் தேவை.



● சுமார் 300 சபைகளுக்கு ரூ. 3500/- மதிப்பில் டோலாக், ஜால்ரா, சிங்கி மற்றும் கிராம சபைகளில் உபயோகப்படுத்தக் கூடிய இசைக் கருவிகள் தேவை.




● 400க்கும் அதிகமான சபைகளில் மின்சார வசதி கிடையாது. வசதிகள் இருந்தாலும் ஒழுங்காக மின்சாரம் கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட கிராமங்களில் அதிகமான விசுவாசிகள் உள்ள சபைகளுக்கு சுமார் ரூ. 6500/- மதிப்பிலான பேட்டரியுடன் இயங்கக்கூடிய **Ahuja, Stranger, speaker Box with Amplifier** போன்ற உபகரணங்கள் **300** சபைகளுக்குத் தேவை.




● இந்த ஆண்டு 10,000 புதிய விசுவாசக் குடும்பங்களுக்குக் கொடுக்கும்படியாக குஜராத்தி ஹிந்தி மொழிகளில் ரூ. 150/- வீதம், 10,000 வேதாகமங்களுக்கு, நிதி உதவி தேவை.



● தமிழ்நாட்டில் ஷாலோம் ஊழியங்களை சபைகள் மற்றும் தேவ ஜனங்களுக்கு அறிமுகம் செய்து, பீல் மக்கள் இரட்சிப்பிற்காக ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்களை எழுப்பி நிதி உதவி சேகரித்து அனுப்பும் ஷாலோம் பிரதிநிதிகள் குறைந்தது 500 பேர்கள் தேவை.

ஜெபிப்போம்! கொடுப்போம்! செயல்படுவோம்!

தேவ நாமத்தை மகிமைப்படுத்துவோம்!

# 2017ம் ஆண்டிற்கான ஷாலோம் பணித்தளத் திட்டங்கள்

- 200 புதிய சுதேச ஊழியர்களை எழுப்புதல்.
- 300 புதிய ஆராதனை குழுக்கள் (சபைகள்) உருவாக்குதல்.
- 6000 சபை மூப்பர்களுக்கான 2 நாட்கள் சிறப்பு கூடுகை.
- 5000 வாலிபர்களுக்கான சிறப்பு முகாம்கள் 250 பேர்களாக - 20முகாம்கள்.
- 10000 சிறுவர்களுக்கான சிறப்பு முகாம்கள் 250 பேர்களாக - 25முகாம்கள்.
- 600 ஓய்வு நாள் பாடசாலை ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி (4 மாதங்களுக்கு ஒருமுறை)
- 25000 பெண்களுக்கான சிறப்பு முகாம்கள் 1000 பேர்களாக -25முகாம்கள்.
- 300 திருமண்டல தலைமை போதகர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி முகாம்கள் 75 பேர்களாக- 4 முகாம்கள்
- 50000 இளம் சிறார்களுக்கான **CBC (VBS)** 10 நாட்கள் வகுப்பு மற்றும் (மேமாதம்) 1000 **CBC** ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி.
- 30 தாலுகாக்களில் ஜெப முகாம் நடத்துதல் (முழு தாலுகாவின் இரட்சிப்பிற்காக)
- 100 கிராம ஆலயங்கள் கட்டப்படுதல்.
- 600 கிராமங்களில் சிறப்பு எழுப்புதல் மற்றும் சுகமளிக்கும் கூட்டங்கள் பிரதி வெள்ளிக் கிழமை தோறும் 12 இடங்களில் 50 வாரங்கள் நடத்துதல்.
- 2 மாநிலங்களில் (ம.பி.,குஜராத்) ஷாலோம் ஆத்மீக பயிற்சி நிலையம் **(Shalom Spiritual Life Centre)** உருவாக்குதல்.
- ஆடியோ, வீடியோ மூலமாக ஹிந்தி, குஜராத்தி மற்றும் பீலி, பிலோடி, வாகுடி மொழிகளில் பாடல்கள், செய்திகள் வெளியிடுதல்.
- ஷாலோம் ஆவிக்குரிய எழுப்புதல் பத்திரிகை குஜராத்தி, ஹிந்தி மொழி களில் வெளியிடுதல் மற்றும் ஆவியானவர் தரும் ஆலோசனையின்படி ஊழியங்கள்.

அனைத்து ஷாலோம் ஆதரவாளர்களுக்காக ஜெபிக்கவும், ஆதரவாளர்களை விசாரிக்கவும், மற்றும் முகவரி சரி பார்க்கவும் சகோதரி செல்வி பாண்டியன் பெங்களூர். தன்னார்வமாக இந்த ஊழியத்தை நிறைவேற்ற முன்வந்துள்ளார்கள். அவர்கள் உங்களை தொடர்பு கொள்ளும்போது அவர்களிடம் உங்கள் ஜெபகுறிப்பு, முகவரி மாற்றம் மற்றும் ஊழிய காரியங்களை பகிர்ந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மேலும் அவர்களை தொடர்பு கொள்ள.....9741770200

# அன்பு பகிர்வு இயக்கம் செயற்குழு கூட்டம்

தேவனுடைய பெரிதான கிருபையினால் 13.03.2017 அன்று நம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் வைத்து அன்பு பகிர்வு இயக்கத்தின் செயற்குழு கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கூட்டத்திற்கு செயற்குழு உறுப்பினர்கள் அநேகர் வந்து கலந்துக் கொண்டார்கள். ஆரம்ப ஜெபத்துடன் கூட்டம் ஆரம்பமானது. பேராயர் தேவதாஸ் அவர்கள் மற்றும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் பணித்தளக் காரியங்களைக் குறித்து விளக்கி கூறினார்கள். வந்திருந்த அனைவரும் அவரவருடைய கருத்துக்களை எடுத்துக்கூறி அனைவரும் ஷாலோம் ஊழியங்களுக்காக பாரத்தோடு ஜெபித்தார்கள். அதே நாளில் மாலையில் ஷாலோம் சேரிட்டி மிஷன் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இந்த கூடுகை வந்திருந்த அனைவருக்கும் ஆசீர்வாதமாக இருந்தது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## Sharing Love Mission

Time 10am to 2.00pm

**Members Present**

1. Bishop V. Devadass
2. Prof. C.S. Christopher
3. Mr. J. Arputharaj
4. Mr. P. George
5. Mr. Suthanthirasingh
6. Mr. Jebez Augustine
7. Pas. Gnanasekaran
8. Mr. Sundarraj

**Invites**

1. Mrs. Vahitha Devadass
2. Dr. Abel Rajaratnam
3. Dr. Jolly Rajaratnam
4. Mr. Winston Balasingh
5. Mr. Gladson Titus
6. Mr. Premkumar
7. Mrs. Ranjani Premkumar

## Shalom Charity Mission

Time 3.30 pm to 6.00pm

**Members Present**

1. Mrs. Vahitha Devadass
2. Mr. Gladson Titus
3. Dr. Prema Christopher
4. Mr. Winston John Balasingh
5. Mrs. Ranjani Premkumar
6. Dr. Abel Rajaratnam

**Invites**

1. Mr. Premkumar
2. Dr. Jolly Rajaratnam
3. Bishop V. Devadass
4. Mr. Suthanthirasingh
5. Prof. C.S. Christopher

# அன்பு பகிர்வு இயக்கம் செயற்குழு கூட்டம்

**13.03.2017**


பாடல் வேளை


தேவசெய்தி (பிஷப் தேவதாஸ்)


பணித்தள பகிர்வுவேளை
சகோதரி வஹிதா தேவதாஸ்


தேவசெய்தி (பிஷப் தேவதாஸ்)


தரிசன திட்ட பகிர்வுவேளை...


ஜெபவேளை...

# ஷாலோம் சேரிட்டி மிஷன் செயற்குழு கூட்டம்


ஜெபவேளை...


ஜெபவேளை...

தமிழ்நாட்டில் நடைபெற்ற

# முன்னேற்றப் பணி ஊழியங்கள்

**05.03.2017 தூய யோவான் சி.எஸ்.ஐ. ஆலயம்**

கர்த்தருடைய பெரிதான கிருபையால் ராஜபாளையத்தில் வ.உ.சி. நகர் தூய யோவான் சி.எஸ்.ஐ. ஆலயத்தில் காலை ஆராதனையில் சகோ. சாம் குண சீலன் அவர்கள் தேவனுடைய வார்த்தையையும், ஷாலோம் ஊழியத்தைக் குறித் தும் பகிர்ந்துக் கொண்டார்கள். இதற்கு வாய்ப்பளித்த போதகர் அஜித் ஸ்டேன்லி அவர்களுக்கும், உபதேசியார் தேவதாஸ் அவர்களுக்கும், சபை மூப்பர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**12.03.2017 பெத்தேல் பிளஸ்ஸிங் அசெம்பிளி :**

கர்த்தருடைய பெரிதான கிருபையால் 12.03.2017 அன்று பணித்தள ஊழியர் அபேசிங் சங்கோடு அவர்களுக்கு மார்த்தாண்டம் பெத்தேல் பிளஸ்ஸிங் அசெம்பிளியில் வைத்து ஊழியர் பிரதிஷ்டை நடைபெற்றது. இதில் சகோ. செல் வதுரை அவர்கள் ஷாலோம் ஊழியத்தைக் குறித்து பகிர்ந்துக் கொண்டார்கள். சகோ. டேவிட் அவர்கள் செய்தி கொடுத்தார்கள். பிரதிஷ்டையை கர்த்தர் ஆசீர்வ தித்துக் கொடுத்தார். இதற்கு வாய்ப்பளித்த பாஸ்டர் வெஸ்லி நியு வெஜின் அவர் களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**12.03.2017 ஆண்டித்தோப்பு சி.எஸ்.ஐ. ஆலயம் :**

கர்த்தருடைய பெரிதான கிருபையால் ஆண்டித்தோப்பு சி.எஸ்.ஐ. ஆல யத்தில் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் பணித்தளக் காரியங்களைப் பகிர்ந்துக் கொண்டு தேவசெய்தி கொடுத்தார்கள். வந்திருந்த அனைவருக்கும் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது. இதற்கு வாய்ப்பளித்த போதகர் மோகன் அருள்தாஸ் அவர்களுக்கும், கமிட்டி மூப்பர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறோம்.

**12.03.2017 அபிஷேகநாதர் சி.எஸ்.ஐ. ஆலயம் :**

கர்த்தரின் பெரிதான கிருபையால் வி.கே.புரம்ஆறுமுகப்பட்டி அபிஷேக நாதர் சி.எஸ்.ஐ. ஆலயத்தில் காலை ஆராதனையில் சகோ. ஜாண் அவர்கள் தேவசெய்தி கொடுத்து, ஷாலோம் ஊழியத்தைக் குறித்து பகிர்ந்துக் கொண்டார் கள். இதற்கு வாய்ப்பளித்த போதகர் மதுரம் அவர்களுக்கும், உபதேசியார் ஜெப ராஜ் அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**12.03.2017 சென்னை மேசியா இயேசு நம்மோடு ஆலயம் :**

கர்த்தருடைய பெரிதான கிருபையால் மேசியா இயேசு நம்மோடு ஆல யத்தில் காலை 6 மணி முதல் 8 மணி வரை ஆராதனையில் பிஷப் தேவதாஸ் அவர்கள் தேவசெய்தி கொடுத்து பணித்தள காரியங்களை பகிர்ந்துக் கொண்டார் கள். இதற்கு வாய்ப்பளித்த போதகர் கிறிஸ்டோபர் மணி அவர்ளுக்கு எங்கள் மன மார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அனுதினம் துதிக்க ஜெபிக்க

**ஏப்ரல் - 1 -** "கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார்." உபா. 31:8

**துதி..:** சவிதா என்ற சகோதரி வயிற்றில் கட்டி இருந்தது. மிகவும் வேதனையோடு இருந்தார்கள். அந்த சகோதரிக்காக ஊழியர் மன்னு பாபோர் (குஜராத்)ஜெபித்த போது கட்டி மறைந்தது.

**ஜெபி..:** புதிய நிதியாண்டு ஆசீர்வாதமாய் அமையும்படிக்கு.

**ஏப்ரல் - 2 -** "அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்" சங்.1:3

**துதி..:** ராஜீபாய் என்ற சகோதரன் ஒரு வருட காலமாக படுக்கையில் இருந்தார். மருத்துவம்,மந்திரம் ஒன்றும் பலன் தரவில்லை. இயேசுவை விசுவாசித்து ஊழியர் மன்னு மெய்டாவுடன் (குஜராத்)இணைந்து ஜெபித்ததும் அற்புதமாக சுகம் பெற்றார்.

**ஜெபி..:** தேர்வு எழுதுகின்ற பீல் ஆதிவாசி மாணவர்களுக்காக ஜெபிப்போம்.

**ஏப்ரல் - 3 -** "என் கால் சறுக்குகிறது என்று நான் சொல்லும்போது, உமது கிருபை என்னைத் தாங்குகிறது." சங்.94:18

**துதி..:** லலிதா என்ற சகோதரி வயிற்றுவலி மற்றும் தலைவலியினால் மிகவும் கஷ்டப்பட்டார்கள். இயேசுவின் நாமத்தில் கண்ணீரோடு அந்த சகோதரிக்காக ஊழியர் அனில் கனாவா (குஜராத்)ஜெபித்த போது பூரண சுகம் கிடைத்தது.

**ஜெபி..:** பிஷப் தேவதாஸ் அவர்களுக்கு தேவன் நல்ல சுகம் பெலன் தந்து பாது காக்கும்படியாக.

**ஏப்ரல் - 4 -** "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது; அவ ருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது." சங்.34:15

**துதி..:** தல்சிங் என்ற சகோதரன் சரீர பெலவீனத்தால் வேதனைப்பட்டுக் கொண் டிருந்தார். அவருக்காக ஊழியர் அனில் கனாவா ஜெபித்த போது பெலவீனத்திலி ருந்து சுகம் பெற்றார்.

**ஜெபி..:** சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களை தேவன் இன்னும் அதிகமாக பயன்படுத்தவும் அவர்களுக்கு சுகம், பெலன் தந்து பாதுகாத்துக் கொள்ளும்படி யாக.

**ஏப்ரல் - 5 -** "...ஆனாலும் என் கிருபையினால் உனக்கு இரங்கினேன்." ஏசா.60:10

**துதி..:** லாலாபாய் என்ற சகோதரன் 7 மாதமாக பைத்தியம் பிடித்து வேதனைப் பட்டார். எல்லாவித மருத்துவம் பார்த்தும் பலனில்லை. இவரது பெற்றோர்கள் இயேசுவை விசுவாசித்து ஊழியர் பாவ்சிங் பளாஸ்-(குஜராத்) அவர்களுடன் இணைந்து கண்ணீரோடு ஜெபித்தவுடன் பைத்தியம் தெளிந்து சுகம் பெற்றார்.

**ஜெபி :** சகோ. டைட்டஸ், சகோதரி மெர்லின், Zion இவர்களுக்காகவும், ஷாலோம் சேரிட்டி மிஷன்-ஐ பொறுப்பாக இருந்து கவனித்து வரும் இவர்க ளுக்கு தேவன் விசேஷித்த ஞானத்தைத் தரும்படியாக.

**ஏப்ரல் - 6 -** "கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பார்..." ஏசா.60:20

**துதி..:** ரமேஷ் என்ற சகோதரன் அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இவ ருக்காக ஷாலோம் ஊழியர் புர்சிங் நினாமா (குஜராத்)அவர்கள் ஜெபித்த போது விடுதலை பெற்றார்.

**ஜெபி..:** சகோ. ஷாலோம், சகோதரி ஷெக்கினாவை கர்த்தர் வல்லமையாக பயன் படுத்தும்படியாக.

**ஏப்ரல் - 7** - "..தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்." சங்.23:4

**துதி..:** சவிதா என்ற சகோதரி ஒரு வருடமாக பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இதனால் இந்த சகோதரியினுடைய கை மற்றும் கால்வலியாக இருந்தது. இந்த சகோதரிக்காக ஊழியர் தால்சிங் சங்காடா (குஜராத்) ஜெபித்த போது அற்புதமாக சுகம் கிடைத்தது.

**ஜெபி..:** விடுமுறை வேதாகமப் பள்ளியில் கலந்துக் கொள்ளவிருக்கும் 40000 பிள்ளைகளுக்காகவும், பிள்ளைகளுக்குத் தேவையான பாட்டு புத்தகங்கள், கலர் பென்சில், பேட்ஜ் போன்ற பொருட்களின் தேவைகள் அனைத்தும் சந்திக்கப்படும்படியாக.

**ஏப்ரல் - 8** - "நான் உங்கள் நடுவிலே உலாவி, உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்." லேவி.26:12

**துதி..:** ராவ்ஜி என்ற குழந்தை கழுத்து வலியினால் மிகவும் கஷ்டப்பட்டது. இந்தக் குழந்தைக்காக ஊழியர் தானுபாய் பாரியா (குஜராத்)ஜெபித்த போது கர்த்தர் பூரண சுகத்தைக் கட்டளையிட்டார்.

**ஜெபி..:** பணித்தளங்களில் குறிப்பாக மத்தியப்பிரதேசத்தில் காணப்படுகின்ற எதிர்ப்புகளுக்காக, எதிர்க்கக்கூடியவர்கள் இயேசுவின் அன்பை அறிந்திடும்படியாக.

**ஏப்ரல் - 9** - "கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது." சங்.34:10

**துதி..:** சங்கீதா என்ற சகோதரி வயிற்று வலியினால் பல நாட்களாக வேதனைப்பட்டார். இயேசுவை விசுவாசித்து ஊழியர் தானுபாய் பாரியா (குஜராத்) அவர்களுடன் இணைந்து ஜெபித்த போது கர்த்தர் சுகத்தைக் கட்டளையிட்டார்.

**ஜெபி..:** குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய 3 மாநிலங்களில் எழுப்பப்பட்டுள்ள 650க்கும் மேலான சபைகளுக்காகவும், இன்னும் சபைகள் எழும்பாத கிராமங்களுக்காக ஜெபிப்போம்.

**ஏப்ரல் - 10** - "நீங்கள் தரித்துநின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்." 2நாளா.20:17

**துதி..:** சேனா என்ற சகோதரி 3 வருடமாக பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டிருந்தார். பல வைத்தியம் செய்தும், மந்திரம் செய்தும் பலனில்லாமல் இருந்தது. ஊழியர் ஹவ்சிங் சங்காடா (குஜராத்) அவர்கள் இந்த சகோதரிக்காக ஜெபித்த போது அற்புத விடுதலை அடைந்தாள்.

**ஜெபி..:** அனைத்து கிராமங்களிலும் ஆலயங்கள் கட்டப்பட ஜெபிப்போம்.

**ஏப்ரல் - 11** - "நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே..." ஏசா.41:10

**துதி..:** தினேஷ் என்ற சகோதரன் 7 வருடமாக பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டிருந்தார். பல வைத்தியம் செய்தும், மந்திரவாதிகளை நாடியும் பலனில்லாமல் போகவே கடைசியாக அவருடைய பெற்றோர் இவரை ஊழியர் தர்சிங் வாக்லே (குஜராத்) அவர்களிடம் அழைத்துச் சென்று இவருக்காக ஊழியர் கர்த்தரிடம் மன்றாடியபோது இவர் பூரண சுகம் பெற்றார்.

**ஜெபி..:** லெந்து நாட்களில் ஒவ்வொரு சபைகளிலும் நடக்கும் உபவாச ஜெபங்களுக்காகவும், அநேகர் தேவனுடைய மந்தைக்குள் சேர்க்கப்படவும் ஜெபிப்போம்.

**ஏப்ரல் - 12** - "நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவே ன்..."ஏசா.41:10

**துதி..:** ஆசிஷ் என்ற சகோதரன் காய்ச்சலினால் வாந்தி மற்றும் வயிற்றுப் போக்கினால் மிகவும் கஷ்டப்பட்டார். இவரை ஊழியர் பகதூர் டோடியார் (இராஜஸ்தான்) அவர்களிடமிருந்து அழைத்துச் சென்று ஜெபித்த போது இவருக்கு பூரண சுகம் கிடைத்தது.

**ஜெபி.. :** வெயில் காலங்களில் பணித்தளங்களில் உள்ள பீல் மக்கள், சிறுவர்கள் வெயிலினிமித்தம் பாதிக்காமலும் இதனால் எந்த நோயும் இவர்களுக்கு வராதபடி ஜெபிப்போம்.

**ஏப்ரல் - 13**- "என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்."ஏசா.41:10

**துதி..:** சுசில் என்ற சகோதரன் தலையில் கட்டி இருந்தது. பல வைத்தியம் செய்தும், ஆடு கோழிகளை வெட்டி பலியிட்டும் சுகம் கிடைக்கவில்லை. விசுவாசி ஒருவர் மூலமாக சுகமளிக்கும் ஆராதனையில் கலந்துக் கொண்டு கண்ணீரோடு ஜெபித்த போது கட்டி மறைந்து விடுதலைப் பெற்றார்.

**ஜெபி.. :** பணித்தளத்தில் வெள்ளிவிழா திட்டமான அந்தர்வேலியா பேராலயம், மாணவர்களுக்கு பள்ளி மற்றும் விடுதி, ஷாலோம் அலுவலகம் துரிதமாக கட்டி முடிக்கப்படவும் அதன் தேவைகள் அனைத்தும் சந்திக்கப்படவும் ஜெபிப்போம்.

**ஏப்ரல் - 14** - "நான் உன்னைத் தெரிந்து கொண்டேன்."ஏசா.41:9

**துதி.. :** மகு கராசியா என்ற ஊழியர் டைபாய்டு காய்ச்சலினால் வேதனைப்பட்டார். இவருடைய பெலவீனத்திற்காக அனைவரும் சேர்ந்து ஜெபித்த போது இவர் பூரண சுகம் பெற்றார்.

**ஜெபி..:** சுதேச ஊழியர்களது குடும்பம் முழுவதும் ஆசீர்வதிக்கப்படவும், பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.

**ஏப்ரல் -15**- "உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலதுகையைப் பிடித்து பயப்படாதே, நான் உனக்குத் துணைநிற்கிறேன் என்று சொல்லுகிறேன்."ஏசா.41:13

**துதி.. :** தினேஷ் என்ற சகோதரன் மஞ்சள்காமாலை நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். பல வைத்தியம் செய்தும் பலனில்லாமல் போகவே இயேசுவை விசுவாசித்து கண்ணீரோடு ஊழியர் மனீஷ் மெய்டா ஜெபித்த போது சுகம் பெற்றார்.

**ஜெபி.. :** பணித்தளங்களிலே நடைபெறுகின்ற வாலிபர்கள் கூடுகையில் அனைத்து வாலிபர்களும் இரட்சிக்கப்பட்டு இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு அவருக்காக வைராக்கியமாக எழும்பும்படியாக ஜெபிப்போம்.

**ஏப்ரல் -16-** "பயப்படாதே; உன்னை மீட்டுக் கொண்டேன்; உன்னைப் பேர் சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்."ஏசா.43:1

**துதி..:** பாதர்பாய் என்ற சகோதரனின் மருமகள் மரிக்கும் தருவாயில் வியாதிப்பட்டிருந்தாள்.பல மந்திரவாதிகள் வந்து பலிகளை செலுத்தி பூஜை செய்தும் பலனில்லாமல் ஊழியர் சோகன்லால் நினாமா (இராஜஸ்தான்) அவர்களிடம் அழைத்துச் சென்று பொருத்தனை செய்து ஜெபித்த போது கர்த்தர் மறுபடியும் புது ஜீவனைக் கொடுத்தார்.

**ஜெபி.. :** விடுமுறை வேதாகப் பள்ளியில் இந்த வருடத்தில் புதிதாக அநேக சிறு பிள்ளைகள் இயேசுவை ஏற்றுக் கொள்ளும்படியாக ஜெபிப்போம்.

**ஏப்ரல் -17-** "உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்றார்."மத்.9:29

**துதி..:** ஜித்ரி என்ற சகோதரி 8 மாதமாக மூட்டு வலியினால் கஷ்டப்பட்டார். இறுதியாக சபைக்கு சென்று ஊழியர் சுரேஷ் பாரியா (இராஜஸ்தான்) அவர்களிடம் வந்து சுகமளிக்கும் ஆராதனையில் கலந்துக் கொண்டு ஜெபித்த போது சுகம் பெற்றார்.

**ஜெபி..** : மத்தியப்பிரதேசத்தில் ஆலயங்களை பிரதிஷ்டை பண்ணவிடாமல் ஆலயத்தில் ஆராதிக்கவிடாமல் எதிர்க்கின்ற நபர்களை இயேசு சந்திக்கும்படியாக எதிர்ப்புகளை எல்லாம் கர்த்தர் மாற்றும்படியாக ஜெபிப்போம்.

**ஏப்ரல் - 18 -** "நீ ஆசீர்வதிக்கப்பட்டவன்; நீ பெரிய காரியங்களைச் செய்வாய்; மேன்மேலும் பலப்படுவாய்."1 சாமு.26:25

**துதி..** : சாரதா என்ற சகோதரி அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். அநேக மந்திரவாதிகளை நாடிச் சென்றும் பலனில்லாமல் சாரதாவை சுகமளிக்கும் ஆராதனைக்கு அழைத்துச் சென்று ஊழியர் சுரேஷ் பாரியா (இராஜஸ்தான்) அந்த சகோதரிக்காக ஜெபித்த போது சுகம் அடைந்தாள்.

**ஜெபி..** : 1 கோடி பீல் மக்களும் நம் தலைமுறையிலேயே இரட்சிக்கப்படும்படியாக ஜெபிப்போம்.

**ஏப்ரல் - 19 -** "நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்."யோவான் 11:40

**துதி..** : ரமிலா என்ற சகோதரி 3 மாதமாக டைபாய்டு காய்ச்சலினால் மிகவும் வேதனைப்பட்டார். இவருக்காக ஊழியர் வால்சிங் நினாமா அவர்கள் ஜெபித்தபோது சகோதரி பூரண சுகம் பெற்றாள்.

**ஜெபி..** : ஊழியம் செய்வதற்கு அதிக தூரத்திற்கு செல்லும் நம் சுதேச ஊழியர்களுக்கு வாகனம் கிடைக்கும்படியாக ஜெபிப்போம்.

**ஏப்ரல் - 20 -** "கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்."ஏசா. 40:31

**துதி..** : 3 சிறுவர்கள் மாலைக்கண் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். பல வைத்தியங்கள் பார்த்தும் சுகம் கிடைக்கவில்லை இவர்களுக்காக ஊழியர் ஜோர்சிங் புரியா (ம.பி.)அவர்கள் கர்த்தரிடம் மன்றாடியபோது கர்த்தர் இந்த 3 சிறுவர்களுக்கும் நல்ல பார்வையை கொடுத்தார். தேவனுக்கே மகிமை!

**ஜெபி..** : நம் ஷாலோம் ஊழியத்தின் Board Members ஒவ்வொருவருக்காகவும் நாம் பாரத்தோடு ஜெபிப்போம். கர்த்தர் அவர்கள் செய்கிற பணிகளை ஆசீர்வதிக்கும்படியாக ஜெபிப்போம்.

**ஏப்ரல் - 21 -** "நான் இன்றுமுதல் உங்களை ஆசீர்வதிப்பேன்."ஆகாய். 2:19

**துதி..** : சத்தினா என்ற சகோதரி கேன்சர் வியாதியினால் பாதிக்கப்பட்டு கால் அழுகி சதை இல்லாமல் எலும்பு மாத்திரமே இருந்தது. இந்த சகோதரி இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டு மத்தியப்பிரதேசத்தில் உள்ள பிட்டோல் ஆலயத்தில் ஊழியர் ஜோர்சிங் புரியாஅவர்களிடம் சென்ற போது ஊழியர் இந்த சகோதரிக்காக ஜெபித்த போது என்ன ஆச்சரியம் தேவன் இந்த சகோதரிக்கு அழுகிப்போன சதை எல்லாம் புதிதாகி அந்த எலும்பையே மறைத்து சுகம் அடைந்து வருகிறார்கள் கர்த்தருக்கே கோடா கோடி நன்றி.

**ஜெபி..** : நம் பணித்தளத்தில் பணிபுரிகிறதான அலுவலக ஊழியர்கள் குடும்பங்களுக்காகவும் அவர்களுடைய பாதுகாவலுக்காகவும் நாம் கருத்தோடு ஜெபிப்போம்.

**ஏப்ரல் - 22 -** "கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர்."எண். 6:25

**துதி..** : மோகன் என்ற சகோதரனுக்கு 3 வருடங்களாக குழந்தை இல்லாமல் பல வைத்தியர்களிடம் சென்றும் பலனில்லாமல் இருந்தது. இறுதியில் சபைக்குச் சென்று ஊழியர் சோகன்லால் நினாமா(இராஜஸ்தான்) அவர்களிடம் சென்று கண்ணீரோடு ஜெபித்த போது கர்த்தர் குழந்தை பாக்கியத்தைக் கொடுத்து ஆசீர்வதித்தார்.

**ஜெபி..:** ஷாலோம் ஊழியத்தில் கிளை அலுவலகங்களில் பணிபுரிகிறதான நம்முடைய முன்னேற்றப் பணியாளர்கள் ஒவ்வொருவருக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும், அவர்களுடைய பாதுகாவலுக்காகவும் நாம் ஜெபிப்போம்.

**ஏப்ரல் - 23 -** "கெம்பீரித்துப்பாடு; இதோ, நான் வந்து உன் நடுவில் வாசம்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்."சகரி. 2:10

**துதி..:** தாபுசுபாய் என்ற சகோதரன் 4 ஆண்டுகளாக அல்சரினால் பாதிக்கப்பட்டிருந்தார். பல வைத்தியம் செய்தும் பலனில்லை. சபைக்கு வந்து ஊழியர் மால்சிங் சகோரியா பாரத்தோடு ஜெபித்த போது சுகம் பெற்றார்.

**ஜெபி..:** ஷாலோம் தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்காகவும், அவர்களுடைய சுகத்திற்காகவும் அவர்களுடைய குடும்பங்களுக்காகவும் பாதுகாவலுக்காகவும் நாம் பாரத்தோடு ஜெபிப்போம்.

**ஏப்ரல் - 24 -** "நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார்."ஆதி. 28:15

**துதி..:** ரஸிலிபேன் என்ற சகோதரி ஒரு வருடமாக அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். மந்திரம் மற்றும் மருத்துவம் செய்தும் பலனில்லை. இவரது பெற்றோர்கள் இயேசுவை விசுவாசித்து ரஸிலிபேனை சபைக்ககு அழைத்து சென்று ஜெபித்தபோது அற்புத விடுதலைப் பெற்றார்.

**ஜெபி..:** ஷாலோம் ஊழியத்தை கரிசனையோடு ஜெபித்து தாங்குகின்ற நம்முடைய ஆதரவாளர்கள் ஒவ்வொருவருடைய குடும்பங்களுக்காகவும், அவர்களுடைய தொழில்களுக்காகவும், பாதுகாவலுக்காகவும் நாம் ஜெபிப்போம்.

**ஏப்ரல் - 25 -** "கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான்."நீதி. 28:25

**துதி..:** ஷன்பாய் என்பவர் 10 ஆண்டுகளாக டி.பி. இருமலினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். பல மருத்துவம் செய்தும் பலனில்லாமல் சபையில் வந்து ஆராதனையில் பங்கு பெற்று கண்ணீரோடு ஊழியர் மால்சிங் சகோரியா அவர்களோடு சேர்ந்து ஜெபித்த போது சுகம் கிடைத்தது.

**ஜெபி..:** பணித்தளத்தில் வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறுகின்ற சுகமளிக்கும் ஆராதனையில் பங்கு பெறுகின்ற அனைத்து பீல் மக்களுக்கு கர்த்தர் அற்புத சுகத்தை கொடுக்கும்படியாக இதினிமித்தமாக கர்த்தருடைய மந்தையில் சேரும்படியாக ஜெபிப்போம்.

**ஏப்ரல் -26-** "உமது கரம் என்னோடிருந்து, தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கிக் காத்தருளும் என்று வேண்டிக்கொண்டான்; அவன் வேண்டிக்கொண்டதைத் தேவன் அருளினார்."1 நாளா. 4:10

**துதி..:** விரூ கிராமத்திலுள்ள ஒரு சகோதரன் 8 வருடமாக அசுத்த ஆவியின் பிடியினால் வேதனைப்பட்டார். சபைக்கு ஜெபிக்கும்படியாக அழைத்து வந்தனர். கர்த்தரை அறிந்து ஏற்றுக் கொண்டு ஜெபித்து சுகம் பெற்றார்.

**ஜெபி..:** குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய 3 மாநிலங்களிலுள்ள 1 கோடி பீல் மக்களும் இரட்சிக்கப்படும்படியாக நாம் பாரத்தோடு ஜெபிப்போம்.

**ஏப்ரல் - 27 -** "தேவன் நான் நம்பியிருக்கிற துருகமும், என் கேடகமும், என் ரட்சண்ணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமும், என் புகலிடமும், என் ரட்சகருமானவர்."2 சாமு. 22:3

**துதி..:** வஸ்னா பாபு என்ற சகோதரன் தாலாகூட் கிராமத்தைச் சேர்ந்தவர். இவரு

டைய கால்கள் இரண்டும் வயிற்றோடு ஒட்டி இருந்தது. அதனால் இந்த சகோதர னால் நடக்கமுடியாது. ஆகவே இந்த சகோதரனுடைய மனைவி தான் தன் முது கில் வைத்து ஆலயத்திற்கு தவறாமல் வந்து விடுவார். இவருக்காக ஊழியர் ஜோர்சிங் புரியா (மத்தியப்பிரதேசம்) ஜெபித்ததால் இவருடைய வயிற்றில் ஒட்டி இருந்த கால்கள் தரையில் ஊனும்படியாக தேவன் அற்புதத்தை செய்திருக் கிறார். இப்போது இந்த சகோதரன் அவராகவே மனைவி தூக்கி வராமல் ஆலயத் திற்கு வர முடிகிறது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

**ஜெபி..** : இன்று பிறந்த நாளை காணும் நம் பேராயர் தேவதாஸ் அவர்கள் 2வது குமாரன் **பிரைட்டன் ஷாலோம்** அவர்களுக்காக, கர்த்தர் இந்த புதிய ஆண்டில் புது கிருபைகளைத் தந்து பீல் மக்களுக்கு ஆசீர்வாதமான பாத்திரமாக மாற்ற நாம் பாரத்தோடு ஜெபிப்போம்.

**ஏப்ரல் - 28 -** "நான் உன்னோடேகூட இருந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்."ஆதி. 26:3

**துதி..** : உஸ்னி என்ற பெண்மணி 5 வருடமாக சரீர வலியினால் வேதனைப்பட் டார். சுகமளிக்கும் ஆராதனையில் கலந்துக் கொண்டு ஜெபித்த போது சுகம் பெற்றார்.

**ஜெபி..** : தற்போது அநேக சிறுவர்கள் டெங்கு காய்ச்சல், பன்றி காய்ச்சல் போன்ற வியாதியினால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சிறுவர்களுக்காக இந்த வியாதிகள் நம் தேசத்தை விட்டு வெளியேறும்படியாக நாம் ஒருமனதோடு ஜெபிப்போம்.

**ஏப்ரல் - 29 -** "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னி டத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்."மத். 11:28

**துதி..** : முனிஷா பாரியா என்ற சகோதரன் ஒரு வருடமாக வெண்குஷ்டத்தினால் வேதனைப்பட்டார். பல மருந்துகள் சாப்பிட்டும் பலனில்லை. பின் சபை ஊழிய ரிடம் ஜெபித்தபோது நல்ல சுகத்தைப் பெற்றுக் கொண்டார்.

**ஜெபி..** : தேசத்திலுள்ள அனைத்து வாலிபர்கள் சந்திக்கப்படும்படியாகவும், கர்த்த ருக்காக வைராக்கியமாக எழும்பவும் நாம் பாரத்தோடு ஜெபிப்போம்.

**ஏப்ரல் - 30** - "என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்."யோவான் 14:14

**துதி..** : கோப்ஸிபேன் என்ற சகோதரி 2 வருடமாக கால் வலியினால் அவதிப்பட் டார். மருத்துவரிடம் சென்றும் மந்திரம் செய்தும் பலனில்லை.இந்நிலையில் இயேசுவை விசுவாசித்து கண்ணீரோடு ஜெபித்த போது பரிபூரண சுகம் பெற்றார்.

**ஜெபி..** : தேர்வு எழுதும் 10, 12ம் வகுப்பு பிள்ளைகள் அனைவரும் நல்ல மதிப் பெண்களை பெறும்படியாகவும், அவர்களுடைய எதிர்காலத்தை கர்த்தர் ஆசீர்வ திக்கும்படியாகவும், பீல் மக்கள் அனைவருடைய வாழ்க்கை தரம் உயரவும், அவர்களுடைய விவசாயம் ஆசீர்வதிக்கப்படவும் நாம் பாரத்தோடு ஜெபிப்போம்.

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- காணிக்கைகளை E.M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பும்போது கிளை (சிதம்பரநகர்) என்று குறிப்பிட்டு அனுப்பவும். அவ்வாறு அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கொடுக்கும்படி தயவாய் கேட்டுக் கொள்கிறோம்.
- SHARING LOVE MISSION என்ற பெயருக்கு D.D. அல்லது Cheque எடுத்து தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு பதிவு தபால் அல்லது கொரியர் மூலமாக உங்கள் காணிக்கைகளை அனுப்பலாம்.
- உங்களது வங்கிக் கணக்கிலிருந்து, Net Transfer மூலமாகவும் காணிக்கைகளை கீழ்க்கண்ட எங்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பலாம்.
- நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க்கண்ட வங்கிகளில் எங்கள் கணக்குகளில் Cash (or) Cheque (or) D.D. மூலம் Deposit பண்ணலாம்.
- எங்களது ஷாலோம் கிளை அலுவலகங்களுக்கு நேரடியாக வந்தும் காணிக்கைகளைக் கொடுத்து ஜெபித்துச் செல்லலாம்.

QR Code

**வங்கிக் கணக்கின் பெயர் : Sharing Love Mission**
**Branch : Tuticorin. கிளை : தூத்துக்குடி**

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

**AXIS BANK**
**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் Cash (or) Cheque (or) D.D. மூலமாகவோ அல்லது Net Transfer மூலமாகவோ காணிக்கை செலுத்தினால், உடனடியாக அந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை e-mail, Phone, SMS, Whats app மூலமாக எங்களுக்குத் தெரிவியுங்கள். தொடர்புக்கு : 93456 75468



# ஷாலோம்

## வேத வினாப் போட்டி

39

**(யோபு புஸ்தகம் 1 முதல் 15ம் அதிகாரத்திலிருந்து விடை காணவும்)**

1. நாட்கள் எதைப் போல் தீவிரமாய் ஓடுகின்றது?
2. எது சம்பூரணமாய் இருக்கும்?
3. எவைகளின் பற்கள் தகர்ந்து போம்?
4. எது வான பரியந்தம் உயர்ந்தது?
5. காட்டுக் கழுதைக்கு ஒப்பாய் இருப்பவன் யார்?
6. யாருடைய நம்பிக்கை சாகிறவன் சுவாசம் போல் அழிந்து போம்?
7. யாருடைய கச்சையை தளர்ந்து போக பண்ணுகிறார்?
8. எதை எனக்கு பலிக்கப் பண்ணுகிறீர்?
9. ஒரு மரத்தைக் குறித்து என்ன நம்பிக்கை உண்டு?
10. பூமியின் தூளில் முளைத்ததை எது மூடும்?

## வேதவினாப் போட்டியில் பங்குபெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள்

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. கேள்வி எண்ணைக் குறிப்பிட்டு பதில்களை மட்டும் தெளிவாக எழுதினால் போதும்
3. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
4. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 16.04.2017

## கடந்த மார்ச் மாத வேத வினாப் போட்டி எண் 38-க்கான சரியான விடைகள்

1. மொர்தெகாய் யூத குலமானால் அவனை மேற்கொள்ளாமல் தாழ்ந்து போவது நிச்சயம் - எஸ்தர் 6:13
2. மொர்தெகாய் - எஸ்தர் 10:3
3. இப்படிப்பட்ட காலத்திற்கு உதவியாய் இருக்கும்படிக்கு எஸ்தருக்கு ராஜ மேன்மை கிடைத்திருக்கும் - எஸ்தர் 4:14
4. மெமுகான் - எஸ்தர் 1:13
5. ஆமான் ராஜாத்தியை பலவந்தம் செய்ய வேண்டுமென்று இருக்கிறானோ என்று ராஜா கூறியவுடன் - எஸ்தர் 7:8
6. 180 நாள் - எஸ்தர் 1:4
7. மொர்தெகாய் எஸ்தருக்கு அண்ணன் முறை - எஸ்தர் 2:5-7
8. யூதருக்கு வெளிச்சமும் மகிழச்சியும், களிப்பும், கனமும் உண்டாயிற்று - எஸ்தர் 8:8-16
9. மொர்தெகாய்க்கு செய்யும்படி ஆமானின் மனைவியாகிய சிரேஷீம் அவனுடைய சிநேகிதர்கள் எல்லாரும் கூறினர். - எஸ்தர் 5:13,14
10. பதினாயிரம் தாலந்து வெள்ளி - எஸ்தர் 3:9

**கடந்த மார்ச் மாத வேதவினா போட்டி எண் 38ல் பங்கு பெற்றவர்கள் 81 பேர்கள். சரியான விடையினைக் குறித்த நேரத்திற்குள் எழுதிய 22 பேர்களின் விபரங்கள் :**

சகோதரி J.S. பிரியா - நாகை மாவட்டம், சகோதரி டி. சுகந்தலெட் - சாத்தன் கோடு அஞ்சல், சகோ. M. வில்சன் தர்மராஜ் - போடிநாயக்கனூர், சகோதரி . ஞானமணி ஜெயபால் - S. கைலாசபுரம், சகோதரி லில்லியன் ஜோசப் - திருச்சி. சகோதரி S. தங்கபுஷ்பம் - வாழையடி, சகோதரி.புஷ்பா வினோத்-வாழையடி சகோதரி சரோஜினி எலிசபெத் ரோஸ் - சென்னை, சகோதரி ஜூடித் எட்வின் - சென்னை. சகோதரி ரமோலா S. பாபு - நாகர்கோவில், சகோ. J. பொன்ராஜ் - சென்னை. சகோதரி V. சுந்தரி விஜயபாஸ்கர் - சென்னை.சகோதரி அமுதா சந்திரசேகரன் - மும்பை. சகோதரி ஷீபா அசோகன் - வேலூர். சகோதரி குணசீலி கோயில்பிச்சை - பாளையங்கோட்டை. சகோதரி சாந்தி ராஜன் - பாளையங்கோட்டை. சகோதரி P. புஷ்பராணி பெஞ்சமின் - தூத்துக்குடி. சகோதரி J. சாந்தி - தூத்துக்குடி. சகோதரி பாலின் ஜோன்ஸ் - தூத்துக்குடி. சகோதரி R. முத்துலெட்சுமி - தூத்துக்குடி. சகோ. I. சுந்தரபாண்டி எட்வர்ட் - நாசரேத். சகோதரி ஸ்மித் தாமஸ் - உடையார்குளம், நாசரேத் வழி.

### பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி

SHARING LOVE MISSION, 5A/323, Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. TN.Ph. : 0461 - 2375468

WhatsApp

**வாசகர்கள் தங்கள் பதில்களை**
9345675468 என்ற மொபைல் எண்ணிற்கு SMS மூலமாகவோ Whats App மூலமாகவோ அனுப்பலாம் அல்லது info@shalommission.in என்ற ஈ-மெயிலும் அனுப்பலாம்.

sms




**ஹெவன் Heaven TV India**
**நாகர்கோவில் – ஞாயிற்றுக்கிழமை**
மாலை 5.00 மணி முதல் 5.30 வரை

**ARK T.V.**
**நாகர்கோவில் – திங்கள் கிழமை**
மாலை 8.00 மணி முதல் 8.30 வரை

**ஹெவன் Heaven TV**
**சென்னை – ஞாயிற்றுக்கிழமை**
மாலை 5.00 மணி முதல் 5.30 வரை

**HOPE T.V.**
**தூத்துக்குடி – ஞாயிற்றுக்கிழமை**
மாலை 5.00 மணி முதல் 5.30 வரை

**CROSS T.V.**
**தூத்துக்குடி – புதன் கிழமை**
காலை 7.30 மணி முதல் 8.00 வரை

## ஷாலோம் ஆதரவாளர்களுக்கு ஓர் அறிவிப்பு

அன்புள்ள ஷாலோம் ஆதரவாளர்களுக்கு, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய 3 மாநிலங்களில் வாழும் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கு உணவு, உடை, உறைவிடத்துடன் கல்வி மற்றும் உயர்கல்வியினை அளித்து அவர்கள் சமுதாயத்தில் முன்னேறப் பாடுபடுவதோடு, பீல் ஆதிவாசி ஜனங்களுக்கு இலவச மருத்துவச் சேவை மற்றும் இதர சமுதாய முன்னேற்றப் பணிகளை நிறைவேற்றிவரும் **Shalom Charity Mission** க்கு அரசாங்கத்திடமிருந்து வருமான வரிவிலக்குச் சான்று (80G) கிடைக்கப் பெற்றுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். சமுதாய முன்னேற்றப் பணி, பீல் ஆதிவாசி சிறுவர் முன்னேற்றப்பணி, மற்றும் மருத்துவ பணிக்குக் காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்கள் இந்த வருமான வரிவிலக்கினை கேட்டுப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## நிதியாண்டிற்காக நன்றி செலுத்துவோம்

2016-17 நிதி ஆண்டை கர்த்தர் ஆசீர்வதித்து தந்தார். கடந்த நிதியாண்டில் காணிக்கை கொடுத்த உங்கள் யாவருக்கும் நன்றி செலுத்துகிறோம். தேவனுக்கே மகிமை! நீங்கள் கொடுக்கும் ஒவ்வொரு காணிக்கைக்கு நாங்கள் தேவனுக்கு கணக்கு ஒப்புவிக்க கடமைப் பட்டுள்ளோம் அதே போல நமது இந்திய அரசாங்கத்திற்கும் ஒவ்வொரு வருடமும் கணக்கு தணிக்கை செய்யப்பட்டு ஒப்புவிக்கிறோம். அதற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்

2017-18 புதிய நிதி ஆண்டு தேவைகள் சந்திக்கப்படும்படியாக ஜெபித்துக்கொள்ளுங்கள். ஒருவேளை கடந்த நிதியாண்டில் ஒருமுறை கூட காணிக்கை அனுப்பவில்லை என்றால் இந்த நிதியாண்டில் உங்களால் முடிந்த காணிக்கைகளை அனுப்பி தேவனுடைய ராஜ்ஜியத்தை கட்டமுன்வாருங்கள்.

## நாகர்கோவில் ஷாலோம் கிளை அலுவலகம் ஏப்ரல் மாதம் முதல் இடமாற்றம்.

நாகர்கோவிலில் இயங்கி வந்த ஷாலோம் கிளைஅலுவலகம், ஏப்ரல் மாதம் 1ம் தேதி முதல் கீழே குறிப்பிட்டுள்ள முகவரியில் தொடர்ந்து ஊழியம் நடைபெறும் என்பதை ஷாலோம் பங்காளர்களாகிய உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம். இனிமேல் நாகர்கோவில் பகுதியில் இருப்பவர்கள் உங்களுடைய ஜெபத்திற்காகவும், காணிக்கையை கொடுப்பதற்கும் இதில் குறிப்பிட்டுள்ள விலாசத்திற்கு வந்து ஜெபித்து ஊழிய காரியங்களை பகிர்ந்துக் கொள்ளவும் உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். இந்த அலுவலகம் முன்பு இருந்த அலுவலகத்திற்கு அருகாமலேயே இருக்கிறது என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்துகிறோம்.

**Shalom Branch Office:**

29, Distillery Road, State Bank Road,
Near Padma Benjamin Eye Hospital,
**NAGERCOIL - 629001**
**Mob. : 9688144522, 9698444522**

## ஷாலோம் ஜெபக்கூட்டம்

வருகிற ஏப்ரல் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனிக்கிழமை நாகர்கோவில் அலுவலகத்தில் வைத்து ஜெபக் கூட்டம் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். அனைவரும் தவறாது பங்குபெற அன்புடன் அழைக்கின்றோம்.

# குஜராத் பணித்தள அலுவலகத்தில் தேவனுடைய ஊழியம் செய்ய ஊழியர்கள் தேவை

1. **Accounts Department** -ல் பணிபுரிய
2. **Media Department (Audio, Video - Shooting & Editing)** -ல் பணிபுரிய
3. **Communication Department** -ல் பணிபுரிய,**(Tamil & English Typing** தெரிந்த)
4. **Magazine Department –**ல் பணிபுரிய, **(Tamil & English Typing** தெரிந்த)

இந்தப் பணிகளைச் செய்ய ஊழியர்கள் (சகோதரர்கள். சகோதரிகள் திருமணமான தம்பதிகளானாலும் குடும்பமாக) நமக்கு உடனடியாக தேவைப்படுகிறார்கள், ஆகவே ஊழியத்திற்கு அர்ப்பணித்து. ஊழிய வாஞ்சை உள்ளவர்கள் இருப்பீர்களானால் எங்களோடு தொடர்பு கொண்டு உங்களது Bio-Data வை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும், தகுதிக்கேற்ற ஊதியம் வழங்கப்படும், மேலும் தூத்துக்குடி அலுவலக மேலாளர் சகோ, சாம் குணசீலன் அவர்களோடு தொடர்பு கொள்ளலாம், செல் போன் : 9345675468

**அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம், மத்தேயு 9:37**

## FORM IV

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Thoothukudi |
| 2. | Periodicity of its Publication | : | Monthly |
| 3. | Printer's Name | : | S. Joseph |
| 4. | Address | : | Rajan Press<br>59, Palayamkottai Road,<br>Thoothukudi - 628 002. |
| 5. | Whether the Citizen of India | : | Yes |
| 6. | Publisher's Name | : | V. Devadass |
| 7. | Address | : | 5A/323, Caldwell Colony,<br>3rd,Street, Thoothukudi - 628 008. |
| 8. | Editor's Name | : | V. Devadass |
| 9. | Address | : | As above |

I V. Devadoss, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date : 30.03.2017

sd - V. Devadass
Signature of Publisher

# Shalom Charity Mission

Compassion Project மூலமாக பயன் பெற்று வந்த நமது 850 பீல் ஆதிவாசி குழந்தைகளுக்கு பெறப்பட்டு வந்த நிதி உதவி நிறுத்தப்பட்டதால் அந்த குழந்தைகள் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு நாமாகவே Shalom Charity Mission மூலமாக தாங்க தீர்மானித்துள்ளோம். அக்குழந்தைகள் நன்கு படிப்பவர்கள், திறமை வாய்ந்தவர்கள் மற்றும் நன்கு ஜெபிப்பவர்கள். இக்குழந்தைகளை நீங்கள் குடும்பமாகவோ, சபையாகவோ, குழுவாகவோ இணைந்து ஒரு குழந்தைக்கு ரூ. 700/- கொடுத்து தாங்கும்படி அன்பாக கேட்டுக்கொள்கிறோம். மேலும் தொடர்பு கொள்ள...9345675468



# ஏப்ரல் மாத வாக்குத்தத்த கூட்டம்

**01.04.2017 (சனிக் கிழமை)** காலை 9.15 முதல் 1.00 மணி

**அன்பு பகிர்வு இயக்கம் தலைமை அலுவலகம்**

No. 5A/323, கால்டுவெல் காலனி 3வது தெரு,

**தூத்துக்குடி**-8.

தேவ செய்தி: Prof. C.S.**கிறிஸ்டோபர்**

# ஏப்ரல் மாத முழுஇரவு ஜெபம்

**மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமை (7.4.2017)**

இடம் : Grace Hall (திருநெல்வேலி)

**புதிய பேருந்து நிலையம் தெற்கு வாசல்** L.I.C. **கட்டிட கீழ்பகுதி**

**நேரம் : இரவு 9.30 முதல்**
**அதிகாலை 4.00 மணி வரை**

தேவ செய்தி: Prof. C.S.**கிறிஸ்டோபர்**

ஜெபம் நடத்துபவர்கள் :

**ஷாலோம் கன்னியாகுமரி மாவட்ட ஊழியர்கள்**

அன்புடன் அழைக்கின்றோம்

# நாட்டு நடப்புச் செய்திகள்

ஆதார் அடிப்படையிலான அரசு மானியங்கள், சேவைகள் மற்றும் நிதியுதவிகள் மசோதா, 2017 (Aadhaar (Targeted Delivery of Financial and Other Subsidies, Benefits and Services) Bill, 2017) யை நிறைவேற்றியுள்ள இந்திய மாநிலம் - குஜராத்

www.tnpscportal.in

நாட்டிலேயே முதல்முறையாக பாலியல் குற்றவாளிகள் பற்றிய விவரங்களை கேரள அரசு விரைவில் வெளியிட உள்ளது என்று அந்த மாநில ஆளுநரும், ஓய்வுபெற்ற நீதிபதியுமான பி. சதாசிவம் கூறியுள்ளார்.

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியுடன், அதன் ஐந்து துணை வங்கிகளும், ஏப்ரல் 1ல் இணைகின்றன.

இந்திய இரயில்வேயின் முதல் "அந்தியோதயா எக்ஸ்பிரஸ்" இரயிலான எர்னாகுளம் - ஹௌரா அந்தியோதயா எக்ஸ்பிரஸ் (Ernakulam-Howrah Antyodaya Express (Weekly)) 27.02.2017 துவக்கி வைக்கப்பட்டது. 2016-2017 பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டிருந்த இந்த "அந்தியோதயா எக்ஸ்பிரஸ்" முழுவதும் முன்பதிவற்ற நெடுந்தூரம் பயணிக்கும் அதிவேக இரயில் வண்டியாகும்.

வேலை இல்லாதவர்களுக்கான உதவித் தொகை திட்டம் மூலம் வழங்கப்படும் தொகை இரு மடங்கு உயர்வு - தமிழக அரசு அறிவிப்பு

"சிசேரியன் முறையில் குழந்தை : இரண்டாம் இடத்தில் தமிழகம்".

உலகிலேயே முதல் முறையாக பார்வையற்றோருக்கான பிரைய்லி முறையிலான உலக வரைபடம் (அட்லஸ்) இந்திய அரசின் கீழ் செயல்படும் தேசிய வரைபட அமைப்பின் மூலம் (National Atlas and Thematic Mapping Organisation (NATMO) வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் முதல் மிதக்கும் தொடக்கப்பள்ளி, "லோக்டக் மிதக்கும் துவக்கப் பள்ளி" (Loktak Elementary Floating School) எனும் பெயரில் மணிப்பூர் மாநிலம் "லோக்டக் ஏரியின்" மீது அமைக்கப்பட்டுள்ளது.

பள்ளி பொதுத்தேர்வு விண்ணப்பங்களில் மூன்றாம் பாலினம் எனும் பிரிவை பீகார் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. உச்சநீதிமன்றம் கடந்த 2014ஆம் ஆண்டில் திருநங்கைகளை மூன்றாம் பாலினமாக அங்கீகரித்தது குறிப்பிடத்தக்கது.


கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்

**தலைமை அலுவலகம்**
**SHARING LOVE MISSION**
5A/323, Caldwell Colony,
3rd Street, Tuticorin - 628 008.
Tamil Nadu.
Phone : 0461-2375468, 2377737
Cell : 9345675468

**பணித்தள அலுவலகம்**
**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat
Cell : 09377445468

email : info@shalommission.in Website : www.shalommission.in

## உங்கள் ஜெப உதவிக்கு ஷாலோம் கிளை அலுவலகங்களின் முகவரிகள்

### HEAD OFFICE

**SHARING LOVE MISSION, Bro. Sam Gunaseelan**

No. 5A/323,-3rd Streeet, Caldwell Colony, TUTICORIN-628008

Ph. : 2377737, 2375468, Cell : 9345675468

### CHENNAI BRANCH OFFICE

**Bro. John Jeyasingh** No.102-2nd Main Road Sathya Nagar, Padi, CHENNAI - 600050,Cell : 9698244577

### NAGERCOIL BRANCH OFFICE

**Bro. Robinson. S.**

29,,Distillery Road, State Bank Road,
Near Padma Benjamin Eye Hospital,**Nagercoil - 629001**
Mob. : 9688144522, 9698444522

### MARTHANDAM BRANCH OFFICE

**Bro. Selvadurai.G**

M.T.N. Building, North Street, Near Women's Police Station, Marthandam, K.K. Dist. - 629165, Cell : 9487689869, 9659644500

### MADURAI BRANCH OFFICE

**Bro. Chandra Paul. S**

6/3, Nellaiappar Puram 7th Street,Tirunagar (p.o) MADURAI-625006, Cell : 9698644522

### TIRUNELVELI BRANCH OFFICE

**Bro. David. R**

56 A/4,-C.S.I Church South Street, (Upstairs) STC road, Perumalpuram, Palayamkottai TIRUNELVELI-627007, Cell 9698844599

### MUMBAI BRANCH OFFICE

**Bro. Jacob. N.**

Bathani Bhavan, Room No. 11, First Floor, R. No. 2, Gate No. 6, Malvani, Malad West, Mumbai - 400095,Cell : 09819554974

### COIMBATORE BRANCH OFFICE

**Mr.Yardli Vinodh.J**

No: 31 LakshumiGarden, Palaya Pudur, Periyanayakkan palayam, Coimbatore -641020, Cell : 9698144522

**குழந்தை ஆதரவுத் தொகை மற்றும் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப...**

Shalom Charity Mission

## SHALOM CHARITY MISSION

Branch : Tuticorin,

**AXIS BANK**

Branch : Tuticorin,

**105010100096779 -**

(IFS Code : UTIB0000105)

**TMB**

**Tamilnad Mercantile Bank**

**174100710400061**

(IFS Code : TMBL0000174)

**Branch : Tiruchendur Road**

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449. Postal Regn. No. : TTN/07/2015-2017.
TN/WPP-95/SR/2015-2017, Date of Publication : 25th of every month.
Posted at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

## BLESS A CHILD PROJECT



| | |
|---|---|
| மாணவரின் பெயர் | : தானியேல் |
| தகப்பனார் பெயர் | : ரமேஷ் கத்திஜா |
| தாயார் பெயர் | : மேத்தா கத்திஜா |
| படிக்கும் வகுப்பு | : 2nd Std |
| பிறந்த நாள் | : 28-03-2009 |
| சொந்த ஊரின் பெயர் | : ரூன்கேடா |
| தாலுகா | : ஜாபுவா |
| மாவட்டம் | : ஜாபுவா |

**மாணவரின் பெற்றோரைப் பற்றி சில வரிகள் :** இவனுடைய தகப்பனார் இயேசுவை அறியாத போது சாராயம், பீடி, தம்பாக்கு போன்ற பாவங்களுக்கு அடிமையாக வாழ்ந்து வந்தார். தானியேலுடைய தாயார் மேத்தா கத்திஜா அவர்களுடைய வயிற்றில் கட்டி இருந்தது. சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. இந்நிலையில் ஷாலோம் ஊழியர் அமர்சிங் கத்திஜா அவர்கள் இயேசுவைப் பற்றிக் கூறி ஜெபித்த போது வயிற்றிலிருந்த கட்டி உடனே மறைந்தது. இந்த அற்புதத்தின் மூலம் இயேசுவைக் குடும்பமாக சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து ஷாலோம் ரூன்கேடா சபைக்குச் சென்று ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்தார். தற்போது அதே சபையில் கடந்த 15 வருடங்களாக அங்கத்தினராக இருந்து ஆராதித்து வருகிறார்கள்.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை :** தானியேல் நன்றாகப் படிப்பான். நன்றாக ஜெபிப்பான். விளையாட்டிலும் ஆர்வமுண்டு. இவனுக்கு 2 சகோதரர்கள் மற்றும் 1 சகோதரியும் உண்டு.

**ஜெபியுங்கள் :** இவனுக்காக, இவனுடைய படிப்பிற்காக, நல்ல சரீர சுகத்திற்காக, பெற்றோருக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**ஜெபித்து தாங்க முன் வாருங்கள்**

**Sponsor's Name : Mrs. Anitha Sagayarani, Place:Chennai**

பிரியமானவர்களே நீங்களும் ஜெபித்து மாதம் ரூ.700 கொடுத்து பீல்ஆதிவாசி மாணவரைத் தாங்க முன்வரலாம். இதற்கான காணிக்கைகளை Shalom Charity Mission என்ற பெயரில் அன்பாய் கேட்கிறோம் உங்கள் D.D.அல்லது Cheque மூலமாக அனுப்ப தயவாய் அறிமுகப்படுத்தி நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக வையுங்கள்

Owned and Published by
V. Devadass from No.5A/323,
Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. and
Printed by **S. Joseph at Rajan Press,**
59, Palayamkottai Road, Tuticorin-628 002. Editor : V. Devadass